
www.padippakam.com

பெண்ணடிமை தீராமல் மண்ணடிமை தீராது

# பெண் உரிமை

செப் – அக் 2001

பிணமான அமுதா



குமரி மாவட்டத்தில் தொடரும் ஈவ் - டீசிங் கொடுமை

படிப்பகம்

www.padippakam.com

| பெண் உரிமை | உள்ளே . . . | பக்கம் |
|---|---|---|
| 1–5 | ☞ பெண் உரிமைக்காக | 3 |
| செப் – அக் 2001 | ☞ இரவு நேரத்தில் காவல் காக்கும் பெண்கள் | 6 |
| *தனிச் சுற்றுக்கு மட்டும்* | ☞ தெகல்காவின் உண்மை | 8 |
| விலை | ☞ பெண்கள் பற்றாக்குறை | 10 |
| ரூ. 5.00 | ☞ சிட்டகாங் பெண் போராளி | 14 |
| ஆண்டு சந்தா | ☞ சுதந்திரமாம் சுதந்திரம் | 15 |
| ரூ. 30.00 | ☞ வியட்நாமின் நீளக்கூந்தல் படை | 16 |
| தொடர்புக்கு : | ☞ தலித் பெண்கள் மீதான வன்முறை | 24 |
| அஜிதா | ☞ ஏர்வாடியில் விபரீதம் | 28 |
| 658 (17/34 | ☞ ஆயிஷா | 31 |
| இராணி அண்ணாநகர், கே.கே.நகர் சென்னை – 600 078 | ☞ கனன்றுக் கொண்டிருக்கும் கோபக் கனல் | 44 |



படிப்பகம்

www.padippakam.com

# பெண் உரிமைக்காக...

## ஈவ்டீசிங் கொடுமையை ஒழிக்க பன்னாட்டு நிறுவனங்களை துரத்தியடிப்போம்!

**அன்பார்ந்த நண்பர்களே !**

ஈவ்டீசிங் என்றவுடனே நமக்கு நினைவு வருவது மாணவி சரிகாஷா தான். அதன்பின் துர்கா போன்ற பல மாணவிகளும், சமீபத்திய குமரி மாவட்டத்தில் திராவக வீச்சுக்கு உள்ளான மாணவிகள் சபிதா, சரிதாவின் சம்பவங்களும், நாகர் கோவில் கல்லூரி மாணவி அமுதாவின் தற்கொலையும் ஒரு பெரும் அதிர்வையே தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளது. கடந்த 6 மாதத்திற்குள் குமரி மாவட்டத்தில் 46 ஈவ்டீசிங் வழக்குகள் பதிவாகியுள்ளன. அமுதாவின் சாவைத் தொடர்ந்து ஒரு மாதத்துக்குள் சுமார் 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த கொடுமைக்கு உள்ளான பெண்கள் பதிவில் வராதவர்கள் எத்தனையோ! இளைஞர்கள் மாணவிகளை ஆபாச வார்த்தைகளால் வர்ணிப்பது, பாடுவது, கேலி பண்ணி துரத்துவது, சீண்டுவது, தீண்டுவது, மீறினால் திராவகம் வீசுவது என எல்லை மீறி போகிறது. இதன் விளைவாக, தங்கள் உயிரையே மாய்த்து கொள்ளும் அளவிற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் மாணவிகள்.

### *கேலி, கிண்டல் பண்ணும் சிந்தனையின் பின்னணி என்ன?*

ஏகாதிப்பத்திய நாடுகள் இந்தியா போன்ற பின் தங்கிய நாடுகளை கொள்ளையடிக்க, தனது சுரண்டலை மறைக்க, ஏகாதிபத்திய கலாச்சாரத்தை பின் தங்கிய நாடுகளில் இறக்குமதி செய்கிறது புதிய பொருளாதாரக் கொள்கை. புதிய தொழிற் கொள்கையை ஏகாதிபத்திய நாடுகள் பின் தங்கிய நாடுகளில் புகுத்தியதன் விளைவாக ஆட்குறைப்பு, தனியார்மயம், பஸ் கட்டண உயர்வு, விலைவாசி உயர்வு போன்ற நெருக்கடிக்கு உள்ளாகிறார்கள். இந்த மக்கள் விரோத கொள்கையை எதிர்த்த போராட்டத்திலிருந்து திசை திருப்ப, சிந்தனை உணர்வை மழுங்கடிக்க ஏகாதிபத்தியமும, இந்திய ஆளும் வர்க்கமும் சேர்ந்து ஏகாதிபத்திய நச்சுக் கலாச்சாரத்தை சமூகத்தில் விதைக்கிறார்கள். 'இலாபம்' ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, இந்திய சந்தையைப் பிடிக்க ஏகாதிபத்தியம் பெண்களை கவர்ச்சிப் பொருளாக, போகப் பொருளாக, நுகர்வுப் பொருளாக சித்தரிக்கிறது. தனியார், அரசு தொலைக்காட்சி ஊடகங்கள் அனைத்தும் ஏகாதிபத்தியத்திற்கே விசுவாசமாக சேவை செய்கிறது. திரைப் படங்களில் பெண்களை கவர்ச்சியாக, அரை நிர்வாணமாகக் காட்டி போதை உணர்வுகளை ஊட்டுவதும், காமவெறியைத் தூண்டக் கூடிய அந்தரங்க காட்சிகளைக் காட்டும் புளு பிலிம்களும், பெண்களை அரை, முழு நிர்வாணக் காட்சியுள்ள பக்கங்களும், பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய விளம்பரங்களை அதிகம் கொண்டுள்ள பத்திரிகைகளும், ஏகாதிபத்திய நாடுகள் தனது உற்பத்திப் பொருளை விற்பதற்காக விளம்பரங்களில் சம்பந்தமில்லாததற்கு



படிப்பகம்

www.padippakam.com

கூட பெண்களை கவர்ச்சிப் பொருளாக்கி பொருட்களை விற்கிறார்கள். 'காம உணர்வு' ஒன்றே வாழ்க்கை என்ற மாயையை கழிசடை சமூகத்தில் திட்டமிட்டு புகுத்தப்பட்டதன் விளைவே ஈவ்டீசிங், பிற்போக்கு நிலப்பிரபுத்துவ சிந்தனையும், ஏகாதிபத்திய சீரழிவுச் சிந்தனையும் சேர்ந்தே பெண்களை ஈவ்டீசிங்—ன் கொடுரத்திற்கு காரணமாகிறது. நேற்று சரிகாஷா.... இன்று அமுதா... நாளை, இன்னும் எத்தனை அமுதாக்களோ! இன்று திராவக வீச்சு! விஞ்ஞான வளர்ச்சிப் போக்கில் நாளை எவ்வடிவமோ?

சரிகாஷா, மரணத்துக்குப்பின் 1998—ல் ஈவ்டீசிங் தடுப்புச் சட்டம் என கொண்டு வந்தார்கள். கடந்த மூன்று வருடங்களாக இந்த சட்டம் நடை முறைபடுத்தப்பட்டிருந்தால், குமரி மாவட்டத்திலே இரண்டு வருடங்களுக்கு முன், ஈவ்டீசிங்கிற்கு பலியான மாணவி லட்சுமி பிரியா—வின் விஷயத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால், இன்று சபிதாவும், சரிதாவும் திராவக வீச்சுக்கோ, அமுதா



ஆசிட் வீச்சில்
அலங்கோலமான சரிதா



சபிதா

தற்கொலைக்கோ ஆளாகியிருக்கமாட்டார்கள். காவல் துறையினர் குற்றவாளிகளிடம் லஞ்சத்தை, வாங்கிக் கொண்டு வழக்கை பதிவு செய்யாமல் விட்டு விடுவதும், குற்றவாளிகள் தப்பிக்க ஒத்துழைப்புக் கொடுப்பதும் தான் இக்கொடுமைகள் தொடர காரணமாயுள்ளது. புகார் பெட்டி வந்தது. பெண் காவலர்கள் சீருடையின்றி சென்று, ஈவ்டீசிங் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்களை சித்திரவதை செய்து, பொய் வழக்கு போட்டது தான் மிச்சம். இத்தடுப்பு சட்டம் வெறும் கண் துடைப்பே.

## *இத்தகைய கொடுமைகளைக் கண்டு பெண்கள் ஏன் கிளர்ந்தெழுவதில்லை?*

அடக்கம், நாணம், பொறுமை, சகிப்பு தன்மை போன்ற பண்புகள் பெண்மையுள் சிறப்பு பண்புகள் என போதிக்கப்படுவதால், தனது பிரச்சனைகளை கூச்சத்தால்,



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்படுத்தாமலே மனதில் புதைத்து விடுகிறார்கள். பெண்ணா பிறந்தாலே நாம் அனுபவிக்கத் தான் வேண்டும் என்று சகிப்பு தன்மையோடு ஏற்றுக் கொள்கிறார்கள். குழந்தையிலிருந்தே நிலவுடமைச் சிந்தனையும், ஏகாதிபத்திய சீரழிவு சிந்தனையும் ஊட்டப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள். இந்த சீரழிவு சமூகத்தைக் கட்டிக் காப்பதே தனது கடமையாகக் கொண்டு இத்தகைய கருத்துக்களை நியாயப்படுத்தி அனைத்துமே (குடும்பம், பள்ளி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், சமூகத் தொடர்பு சாதனங்கள், சட்டம்) போதிக்கிறது. இவ்வாறு புரையோடிப் போயுள்ள இந்த சீரழிவு சமூகத்தை, வெறும் சீர்த்திருத்தங்களாலோ, சட்டம் போட்டு இளைஞர்களை கைது செய்வதாலோ, இந்த பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இந்த பிரச்சனைக்கு அடித்தளமே, இந்தியாவில் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கமே! என்று ஏகாதிபத்தியம் நமது நாட்டில் காலடி பதித்ததோ, அன்றிலிருந்தே, குறிப்பாக கடந்த பத்து ஆண்டுகளாகவே ஈவ்டீசிங் பிரச்சனை அதிகமாயுள்ளது. எனவே என்று ஏகாதிபத்திய கழுகுகளை நமது மண்ணிலிருந்து துரத்தி விரட்டுகிறோமோ அன்றே நமது சகோதரிகள் இப்பிரச்சனையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். எனவே, பெண்கள், இளைஞர்கள், மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரும் ஓரணியில் திரண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதன் மூலம் ஈவ்டீசிங்–க்கு முற்று புள்ளி வைக்க முடியும்.

**ஆசிரியர்**

## மறுப்பு

பொன் கொடுத்தால்
பெண்ணுக்கு கல்யாணம்
வியாபார சந்தையில்,,,,!

பெண்மை கொடுத்தால்
பணம் இலவசம்
விபசாரத்தில் !

உழைப்பு கொடுத்தால்
இருப்பிடம் இலவசம்
குடும்பத்தில் !

படிப்பு கொடுத்தால்
பொன் இலவசம்
மன இருட்டில் !

தியாகம் கொடுத்தால்
அன்பு இலவசம்
சுய நலத்தில் !

இப்படி பெண்ணிடம்
பெண்மை. உழைப்பு. படிப்பு
தியாகம் கேட்கின்ற
சமூகமே?
பெண் உரிமை
கொடுக்க மறுக்கின்றாய்?

-கனிமொழி

## வரதட்சணை

முத்து பனிதுளி
அவள் கண்களிலிருந்து
கண்ணீர்
வரதட்சணை கொடுமையில்

-கனிமொழி



படிப்பகம்

www.padippakam.com

# இரவு நேரத்தில் காவல் காக்கும் பெண்கள்

*(சன் மார் நிறுவனம் என்ற ஏற்றுமதி நிறுவனத்தில் முதலாளியின் உழைப்பு சுரண்டலை எதிர்த்து இரவு நேரத்திலும் போராட்டக் களத்திலிருந்த பெண் தொழிலாளர்களை நேரில் சந்தித்த கள அறிக்கை வெளியிடப்படுகிறது – ஆசிரியர்).*

அமைதியான இரவு பத்து மணிக்கு மேல் செட்டிபுண்ணியத்துக்கு செல்ல பேருந்து இல்லாததால் வேன்களுக்கும், லாரிகளுக்கும் கை காட்டினோம். இளகிய மனம் படைத்த வேன் டிரைவர் நீண்ட அலைகழிப்புக்கு பின் அபயமளித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செட்டிபுண்ணியம் கிராம எல்லையில் இறங்கும் போது இரவு மணி 11.30 தெரு விளக்குகளின் மஞ்சள் ஒளியில் காட்டுச் செடிகள் அடர்ந்த தனிமையான பாதையில் சன்மார் புட்வேர் நிறுவனத்தை நோக்கி நடந்தோம். தெரு நாய்களின் குரைப்புகளை கடந்து நிம்மதிப் பெருமூச்சு விடும் நேரம் ஒரு உருவம் முண்டாசு கட்டுடன் நின்று உற்று பார்த்துக் கொண்டிருந்தது.

பயத்தை வெளிக்காட்டாமல் அருகில் சென்ற போது, காவலில் ஈடுபட்டிருந்த பெண், எங்களை அடையாளங் கண்டதுடன், வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார். ஆண் துணையில்லாமல் தனியாகவா வந்தீர்கள் என்று திரும்ப திரும்ப ஆச்சரியப்பட்டார். (அவர் இரவு நேரத்தில் ஒற்றை ஆளாக காவலில் ஈடுபட்டிருந்ததை பார்த்து வாய் பிளந்து நின்றதை அப்போது நாங்கள் சொல்லிக் கொள்ளவில்லை).

சாதாரணமாக ஊதிய உணர்வு கேட்டோ, பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்தோ தான் வேலை நிறுத்த போராட்டங்கள் நடக்கும். இது உடமை தேவைகளை தீர்ப்பதற்காகவே இருக்கும். ஆனால் சன்மார் புட்வேர் தொழிலாளிகளின் போராட்டம் வித்யாசமானது. 13 வருட அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு கூட இங்கு அதிக பட்ச சம்பளம் 2453 ரூபாய் தான். மீதம் உள்ளவர்கள் 1000 முதல் 1500 ரூபாய் வரை வாங்குகிறார்கள். (விலைவாசி ஏறி கிடக்கிற காலத்தில் இந்த சம்பளத்த வச்சுகிட்டு குழந்தைகளுக்கு பீஸ் கட்றதா, வீட்டு வாடகை கொடுக்கிறதா, சாப்பிடறதான்னே தெரியல என்று பொறுமுகிறார்).

சன்மார் நிறுவனத்தின் பெயரில் வாங்கப்படும் ஆர்டர்களில், பெரும்பான்மையானவற்றை ஜாப்வொர்க் என்று வெளியே கொடுத்து விடுகிறது நிர்வாகம். 40– வேலையை மட்டும் தான் நிறுவன தொழிலாளிகள் செய்கிறார்கள். ஆர்டர்கள் அதிகமாக இருக்கும்பட்சத்தில் தொழிலாளிகளுக்கே ஓவர் டைம் வேலை கொடுத்தால், ஆயிரம் ரூபாய் வரை அதிகமாக சம்பாதிக்க அவர்களுக்கு வாய்ப்பிருக்கிறது. குறிப்பிட்ட வேலையை இன்னும் குறைவான சம்பளத்தில் செய்து தர வெளியே ஆட்கள் கிடைப்பதால் தான் புதியவர்களை நிர்வாகம் வேலைக்கு சேர்த்துக் கொள்வதில்லை. தவிர விருப்ப ஓய்வு திட்டத்தின் கீழ் மூன்றில் ஒரு பங்கு தொழிலாளர்களை நிர்வாகம் குறைத்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஊதிய உயர்வு கேட்டால் நஷ்ட கணக்கு காண்பிக்கும் நிர்வாகம், இதேபோல தொடர்ந்து ஆர்டர்களை வெளியே கொடுக்கும் பட்சத்தில் சிறிது காலத்தில் நிறுவனத்தை மூடி விடும் நிலமை இருப்பதால், டிசம்பர் மாதத்தில் இங்கு வேலை செய்யும் 180 பெண் தொழிலாளிகளும் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். (சன்மார் நிறுவனத்தின் மொத்த ஆண் தொழிலாளர்கள் 6 பேர் தான்).

படிப்படியாக இயந்திரங்களை வெளியேற்றும் தந்திரத்தை நிர்வாகம் செய்யத் துவங்கியதால், பெண்கள் தாங்களாகவே முன் வந்து இரவு நேர காவலில் ஈடுபட ஆரம்பித்தனர். தினமும் பத்து பேர் என முறை வைத்திருக்கிறார்கள். ஒரே ஊரில் உள்ளவர்கள் சேர்ந்துக் கொள்வதால், சேர்ந்து வந்து விட்டு சேர்ந்து போகிறார்கள்.

நாங்கள் போன நேரம் கொட்டும் பனியில் மப்ளர் சகிதமாக, தூங்காமல் இருக்க தாயம் விளையாடிக் கொண்டிருந்தனர் பெண்கள் ஆட்டம் முடிந்ததும் பாட்டுக் கச்சேரி 'எந்தன் சோகம் உன்னை தாக்கும் என்று எண்ணும்போது வந்த அழுகை நின்றது' என்று பாடியவாரே சேர்ந்து சிரிக்கிறார்கள். அருகிலுள்ள மலையில், மண் எடுத்துச் செல்லும் காண்ட்ரக்ட் லாரிகள், இவர்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து ஒரு அடி தொலைவில் புழுதியையும், சத்தத்தையும் இரைத்து இடைவிடாமல் இங்குமங்குமாக சென்று கொண்டிருந்தன. முதல்லே இந்த புழுதியினால, பேதி வந்ததுங்க. இப்போ பழகிடுச்சு. வீட்டுல குழந்தைகள பாக்க ஆள் இல்லாதப்போ, அதுங்களை கூட்டிட்டு வரும் போது தான் கஷ்டமாயிருக்கும். குழந்தை ரெண்டடி எடுத்து வச்சுதுன்னா, லாரியில விழுந்துடும். இதை விட, நாங்க போராட ஆரம்பிச்ச முதல் இரண்டு வாரம் மழை ஊத்தும். ஒதுங்க கூட இடமில்லாம, நனைஞ்சுகிட்டே ராத்திரியெல்லாம் நின்னிருக்கோம் என்கிறார்கள்.

மனதில் உறுத்திக் கொண்டிருந்த கேள்வியை கடைசியில் கேட்டே விட்டோம். ஆமா, கல்யாணமாகாத பெண்களெல்லாம் கூட இருக்கீங்க. இரவில் காவல் பார்க்கிறத பத்தி வீட்டுல ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?

ஏன் சொல்லாம. ஆனா விளக்கமா சொன்னப்போ வீட்டில புரிஞ்சுகிட்டாங்க. சில வீடுகள்ல அண்ணன்கள், கொண்டு வந்து விட்டுட்டு கூட்டிட்டு போவாங்க. வீட்டில அம்மா, அப்பா, அண்ணன் கிட்ட சொல்றது கூட கஷ்டமில்ல. ஆனா இந்த பக்கத்து வீடு, எதிர்த்த வீட்டுக்காரங்களை சமாளிக்கிறதுதான் கஷ்டமாயிருக்கு! என்று சொல்லும் போது கூட அவர்களிடம் சோர்வை விட நம்பிக்கை பளிச்சிடுகிறது.

கஷ்டத்த சினிமாவில் தான் பார்த்திருக்கோம் இப்போ நேரிலேயே அனுபவிக்கிறோம். இரண்டு மாசமா சம்பளமில்லாததால, இப்போ நகைய வச்சு சாப்பிடறோம். பஸ்சுக்கு மட்டுமே நாளுக்கு 10 ரூபாய் செலவாகிறது. இது கூட கொடுக்க முடியாம 10 கி.மீ தள்ளியுள்ள ஆத்தூரிலிருந்து சிலர் மலையை சுத்தி நடந்தே வராங்க. குழந்தைகளை வைத்துக் கொண்டு வெயில்ல வெந்து கருகிக்கிட்டிருக்கோம். ராத்தி நாங்க இருக்கும் இடத்துக்கு பாம்பெல்லாம் கூட வரதுண்டு. ஆனா எல்லாத்தையும் மீறி நாங்க தொடர்ந்து போராடறோம் என்கிறார்கள்.

பெண்கள் இல்லாத துறைகளே இல்லை என்றாலும், இரவு நேர காவலிலும் பெண்கள் ஈடுபட்டு நிறுவனத்துக்கு வந்து போகும் எல்லா வாகனங்க்ளையும், நிறுத்தி சோதனையிட்டு அனுப்புகிறார்கள் என்பது புதிய, கேள்வி படாத விஷயமாகவே இருக்கிறது.

**சாம்பவி**



படிப்பகம்

www.padippakam.com

# தெகல்காவின் உண்மை

ஆயுத பேர ஊழலில் ஜார்ஜ் பெர்னான்டஸ் முதல் பல பெரும் அரசியல் பெருச்சாளிகள் ஈடுபட்டதை, தெகல்கா டாட் கம் அம்பலப்படுத்திய விசயம், நமக்கு தெரிந்தது தான். (விளக்கத்திற்கு, பெண் உரிமை மார்ச்–ஏப்ரல் 2001 பார்க்க)

இந்த தெகல்கா டாட் கம் என்ற தனியார் நிறுவனம் இரகசியமாக நடக்கும் ஆயுத பேர ஊழலை எப்படி வெளிக் கொணர்ந்தது என்ற கேள்வி அனைவரின் முன் இருந்தது. அரசியல்வாதிகளிடம் பெண்களை அனுப்பி, அவர்களின் மூலமாக விசயங்கள் வெளிக் கொணரப்பட்டதாக, டெகல்காவின், தலைமை நிர்வாக அதிகாரி தேஜ்பால், வெங்கடசாமி கமிசன் முன் தெரிவித்துள்ளார். இவ்விசயம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதுவே பெரும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது.

"உண்மையை அறியவும், ஊழல் அதிகாரிகளை வலையில் மாட்ட வைக்கவும், நாங்கள் தூண்டில் போட்டோம்" என்று கூறி தங்கள் செயலை நியாயப்படுத்துகிறார். தேஜ்பால் மற்றொரு புறம், "விலை மாதர்களாக உள்ள பெண்களை இப்படி பயன்படுத்துவது தவறல்ல" என்றொரு கருத்தும் இன்று சமூகத்தில் நிலவி வருகிறது.

பாலியல் ரீதியாக பலவீனமாக உள்ள இராணுவ அதிகாரிகளிடம் பெண்களை அனுப்பி இராணுவ விசயங்களை வெளிக் கொணர்ந்திருக்கக் கூடாது, என்று அரசியல்வாதிகள் இராணுவ அதிகாரிகளின் பாலியல் வக்கிரங்களுக்கு வக்காளத்து வாங்குகின்றனர்.

இப்படி, பலர் தங்களின் கருத்துக்களை தெரிவித்த வண்ணமாக இருக்கையில், இது குறித்து, 'பெண் உரிமை' யின் கருத்தை தமிழக மக்களுக்கு தெளிவுப்படுத்த விரும்புகிறது.

தேஜ்பால் கூறுவது போல், பெண்கள் கருவிகளல்ல ... தேவையான போது, தங்களுக்கு சாதகமாக இருக்கும் போது, பெண்களை பயன்படுத்துவதும், தேவையற்ற போது உதாசீனப்படுத்துவதற்கும் பெண்கள் கடையில் விற்கும் பொருட்களல்ல. . .

விசயத்தை கொண்டுவரத்தான் பெண்களை பயன்படுத்தினோம், என்று எளிமையாக கூறி தன்னுடைய ஆணாதிக்க கருத்தாக்கத்தை, இந்த சமூகத்தில் கூர்மைப்படுத்துகிறார் தேஜ்பால்.

சீர்கெட்ட சமூகத்தினால் 'விலை மாதர்களாக' மாற்றப்பட்டவர்களாயினும், அவர்களின் உடலை பணயம் வைத்து ஒரு சிலர் வாதிடுவதுபோல், விசயத்தை வெளிக் கொணருவது என்பது முற்றிலும் பெண்களுக்கெதிரான கொடுமையே தான். . . 'விபச்சாரத்தை' சட்டப்பூர்வமாக்கி பெண்களுக்கெதிரான கொடுமைகளை அதிகரிக்கும் இந்திய ஆளும் கும்பலின் செயல்பாட்டை, இதுபோன்ற வாதங்கள் நியாயப்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

நாட்டையே பாதுகாக்கும் இராணுவ அதிகாரிகள், தங்களின் காம வேட்கையை நிறைவு செய்ய, நாட்டையே விற்க கூட தயங்க மாட்டார்கள் என்பது தான் உண்மை. இதையே தெகல்காவும் அம்பலப்படுத்தியுள்ளது. இத்தனை கேவலமான காம வெறியர்களிடம் இந்தியா சிக்கிண்டுள்ளது என்பதை நினைக்கையில் நெஞ்சு குமுறுகிறது. இந்த கயவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட்டார்களா? என்பது முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்தது போலுள்ளது. இப்படிப்பட்ட அயோக்கியர்களை தண்டிக்கும் சட்டமும் இந்தியாவில் இல்லையென்பது தான் மிகவும் வருந்தக்கூடிய விசயம்!

பெண்ணை படுக்கையறை பாவையாக பாவித்து, விசயங்களை வெளிக்கொணரவே பெண்களை பயன்படுத்தியதாக நியாயப்படுத்தும் பெண்கள் விரோதப் போக்கை 'பெண் உரிமை' வன்மையாகக் கண்டிக்கிறது. அதே சமயம், இந்தியாவில் விபச்சாரம் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய, மாநில அரசின் முன் வைக்கிறது.

**ஆசிரியர்**

## வாசகர் கடிதம்

ஜூலை—ஆகஸ்டு பெண் உரிமை இதழில் வெளியான அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு பற்றிய பெண் உரிமை யின் கருத்துகளை படித்தேன். இதில் முக்கிய கருத்தாக ஒன்றை கூற விரும்புகிறேன்.

திருமணத்திற்கு முன் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது ஒழுக்க கேடான செயலல்ல என்ற தீர்ப்பானது நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றாகவே இருக்கிறது. என்றைக்கு பெண்களின் நிலை ஓங்குகிறதோ, என்றைக்கு அனைத்து பெண்களும் வேலைக்கு வரும் நிலை ஏற்படுகிறதோ, என்றைக்கு உலகளவில் பெண்களுக்கு முழுச்சுதந்திரம் கிடைக்கப் பெறுகிறதோ, என்றைக்கு பெண்களுக்கெதிரான கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறதோ, அன்றே இந்நீதிமன்ற தீர்ப்புக்கு பச்சைக்கொடி காண்பிக்கப்படும். அதுவரை இது செல்லாக் காசாகவே மதிக்கப்படும். **— மாலதி**

ஜூலை – ஆகஸ்ட் இதழில் குடும்பம் பற்றிய நீண்ட விமர்சனம் கோட்பாட்டு மட்டத்தில் பொத்தாம் பொதுவாயிருப்பினும் எல்லாவற்றையும் உள்ளடக்கி உள்ளது . வியத்நாம் பெண்கள் பற்றிய கட்டுரை அதற்கு மாற்றாக நடைமுறை மட்டத்தில் நடந்ததை நிறைவாக விளக்குவதுடன் வழியையும் தெளிவாக காட்டுகிறது. வேறு வழியே இல்லை அலகாபாத் தீர்ப்பு பற்றிய பார்வை ஆள்வோரின் அறிவிப்புகளைபற்றிய கூரிய விழிப்புணர்வு விடாமல் தேவை என்பதை உணர்த்துகிறது.

அன்புடன்,
**சிங்காராயன்**



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் பற்றாக்குறை

"ஒருவனுக்கு ஒருத்தி' கலாச்சாரத்தை மதிப்பவரா நீங்கள்? இன்னும் கொஞ்ச காலத்தில் இந்தக் கலாச்சாரம் மண்ணோடு அழியப் போகிறது. திரும்பவும் பலதார திருமணங்களும், ஆண்–பெண் உறவுகளுக்கிடையே விரிந்த பூசல்களும் நடைமுறைக்கு வர இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு மாற்றம். ஒரு ஆணுக்கு பல பெண்கள் என்பதுப் போய், ஒரு பெண்ணுக்கு பல ஆண்கள் என திருமணங்கள் அமையப் போகின்றன. இந்த விஷயத்தை பிறகு எப்படிச் சொல்வது? ஆயிரம் ஆண்களுக்கு தொள்ளாயிரத்து முப்பத்தி மூன்று பெண்கள் தான் இருப்பதாக நமது 2001 ஆண்டுக்கான சென்சஸ் கணக்கெடுப்பு சொல்கிறது.

ஆண்–பெண் விகிதாச்சாரம் இவ்வளவு குறைந்திருப்பது பற்றி அதிசயிப்பவர்களுக்கு இன்னொரு அதிர்ச்சி. சமீபத்திய சென்சஸ் கணக்கெடுப்பில் 531,277,078 ஆண் குழந்தைகளுக்கு 495,738,169 பெண் குழந்தைகள்தான் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. அதாவது 35 மில்லியன் பெண் குழந்தைகள் பற்றாக்குறை.



ஆண் ஆதிக்க சமுதாயத்தின் கொடுமைகள், பரம்பரைக்கே முற்றுப்புள்ளி வைக்கும் அளவுக்கு மிஞ்சிவிட்டது என்று சொல்லலாம். கருவிலேயே, குழந்தை ஆணா, பெண்ணா என்பதை தெரிந்துக் கொண்டு, பெண் குழந்தை என்றால் கொன்றுவிடுவது இந்தியா முழுவதும் பரவியுள்ளது. ஸ்கேன் செய்து கருவிலேயே பெண் குழந்தையை கண்டுபிடிக்கும் அளவுக்கு பொருளாதார வசதியில்லாதவர்கள், குழந்தை பிறந்ததும் கள்ளிப் பால் கொடுத்து சர்வசாதாரணமாக கொன்று விடும் வழக்கம் அதிகரித்து வருகிறது. ஃபேனுக்கு அருகாமையில் குழந்தையை படுக்க வைத்து மூச்சு திணறும்படி செய்து கொல்வது, பிறந்த உடனேயே குழந்தையை குப்பற படுக்க வைத்து கொல்லுதல், சுவற்றில் வேகமாக தலையை மோதி கொல்லுதல், ஈரத்துணியில் குழந்தையை சுற்றி வைத்துக் கொல்லுதல் என்று ஈவு இரக்கமில்லாத நிறைய வழிமுறைகள் சிசுக் கொலையில் கையாளப்படுகின்றன.

தொடர்ந்து வரும் சிசுக் கொலைக்கும், ஆண்–பெண் விதிகாச்சாரக் குறைவுக்கும் ஆண் ஆதிக்க சமுதாயமும், பெண்களுக்கு தரப்படும் இரண்டாம்பட்ச அந்தஸ்துமே காரணம். இந்தியாவை பொறுத்தவரை கர்ப்பக் காலத்தில் இறப்பு விகிதத்தை, உலக அளவில் முதலாவதாக தக்க வைத்துள்ளது. அதேப் போல, ஆரோக்கியம்



படிப்பகம்

www.padippakam.com

குறைந்த தாய்க்கு பிறப்பதால் இறந்துவிடும் குழந்தைகள் 1000 க்கு 72 என்ற அளவில் மற்ற நாடுகளை விட இந்தியாவில் மிக கூடுதலாக உள்ளது.

உணவு மற்றும் மருத்துவ பராமரிப்பில் பெண் குழந்தைகளை அலட்சியப்படுத்துவதால், அவர்கள் உயிர் வாழ்வதே கேள்விக்குறியாகி விடுகிறது. ஐந்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் சாவு எண்ணிக்கை, ஆண் பிள்ளைகளின் சாவு எண்ணிக்கையை விட மிக அதிகம்.

கடந்த சென்சஸை விட பெண்கள் விகிதம் அதிகரித்துள்ளதா?

1991 சென்சஸில் ஆயிரம் ஆண்களுக்கு 927 பெண்கள் என்ற நிலைமாறி 2001 சென்சஸில் 933 பெண்கள் என்று உயர்ந்துள்ளது. ஆனால் ஆண்–பெண் குழந்தைகள் விகிதாச்சாரம், பெண்களின் வாழ்நிலை உயரவில்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. மருத்துவ துறையின் முன்னேற்றம் காரணமாக, வயதான பெண்களின் வாழ்வுகாலம் அதிகரித்திருப்பது, ஆண்–பெண் விகிதாச்சாரம் கடந்த சென்சஸைவிட கூடியிருப்பதற்கு காரணமாகச் சொல்லலாம்.

பெண் விகிதம் குறைவதற்கு நகர மயமாதல், பெண் கல்வியறிவின்மை, வேலைப்பளு, ஆரோக்கியமின்மை, பெண்ணுக்கு மதிப்பின்மை என்று நிறைய காரணங்கள் சொல்லலாம்.

சாலை வசதிகள் கூடுவதற்கும் பெண்கள் உயிர் வாழும் நிலை குறைவதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்றால் நம்புவீர்களா? நகரமயமாதல், சாலை வசதிகள் போன்ற வளர்ச்சிகள் பெண்களை கொல்லுவதிலேயே போய் முடிகின்றன.

பொதுவாகவே ஆண் ஆதிக்க சமுதாயத்தில், ஆண்களை விட பெண்களுக்கு கிடைக்கும் சுகாதார கவனிப்புகள் குறைவு என்பதால் பெண் விகிதம் குறைகிறது எனலாம். ஆனால் சேலம், தர்மபுரி, மதுரை போன்ற மாவட்டங்களில் மட்டும் இந்த விகிதம் மிக மிக அதிகமாக குறைகிறது என்றால், ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதையும், அதற்காக பெண் குழந்தைகளை கொலை செய்யப்படுவதையுமே இது எடுத்துக்காட்டுகிறது.

வேண்டுமென்றே பெண் சிசுக் கொலை நடப்பதோ, சரியாக கவனிக்கப்படாததால், ஆரோக்கியமின்மை காரணமாக தானே பெண் குழந்தைகள் இறந்து விடுவதோ தமிழ்நாட்டில் நடந்து வருகிறது.

தர்மபுரி மற்றும் மதுரையில், பாதிக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் சாவும், மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமான பெண் கருக்கலைப்புகளும், 'பெண்' சிசுக்கொலை யின்கீழ் வருகின்றது. சேலத்தில் மூன்றில் ஒரு பெண் குழந்தை சாவும், ஐந்தில் இரண்டு பெண் கரு கலைப்பும் பெண் சிசுக் கொலை என்றால் திண்டுக்கல்லில் இந்த எண்ணிக்கை ஐந்தில் ஒரு பெண் குழந்தை சாவாகவும் பத்தில் மூன்று பெண் கரு கலைப்பாகவும் 1997 கணக்கெடுப்புப்படி மதிப்பிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## சமூக காரணிகள்

பெண் சிசுக் கொலை, ஏழை மற்றும் சமூகத்தால் புறம்தள்ளப்பட்ட ஜாதியினரிடையே மிக அதிகமாக காணப்படுகிறது. திண்டுக்கல்லை எடுத்துக் கொண்டால் 124 வழக்குகளில் 82 வழக்குகள் கள்ளர், தேவர், பறையர், பள்ளர் ஆகிய சமூகத்தில் நடந்தவை. தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த பள்ளர் மற்றும் பறையர் சமூகத்தில் 124–ல் 46 வழக்குகள் உள்ளன.

கிராமங்களில் மதிப்புமிக்க ஒரு விவசாயியோ, நில உடமையாளரோ, சிசுக் கொலை செய்யும் பட்சத்தில், இந்த வழக்கம் சமூகத்தில் அங்கீகாரம் பெறுவதுடன், அப்படியே எல்லா ஜாதியினரிடமும் மெதுவாக பரவி விடுகிறது. பொருளாதார பிரச்சனை மட்டுமல்லாமல், இது போன்ற வழக்கம் சடங்காக மாறி விடும் அபாயம் பெண் சிசுக் கொலைக்குள்ளது. பொருளாதார வசதியுள்ளவர்கள் வீட்டில் கூட பெண் சிசு கொலை நடக்கிறது. இன்று 500 ரூபாய் செலவு செய்து கருவிலேயே பெண் குழந்தையை கொன்று விட்டால், நாளை வரதட்சனை என்ற பெயரில் 50,000 ரூபாய் வரை செலவு செய்வதை சேமிக்கலாம் என்று விளம்பரங்கள் வரும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது.

இந்த பழமைவாதங்களின் போதனைகளும், ஆண்–பெண் விகிதாச்சார குறைவுக்கு காரணமெனலாம். உதாரணமாக அயோத்தியா பிரச்சனைக்காக ரதயாத்திரை சென்றதில் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளான பீகார், குஜராத், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் விகிதாச்சாரம் மிக குறைவாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

ப்ரி நேடல் டைகனாஸ்டிக் டெக்னிக்ஸ் சட்டம் (Pre Neetal Diagonistic Technics Act) 1994–ல் கொண்டு வரப்பட்டது. இது கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என மருத்துவ காரணங்களுக்காக அல்லாமல் பார்ப்பதை தடை செய்யும் சட்டம். இந்த சட்டத்தின்படி எல்லா ஜெனிட்டிக் கிளினிக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வழக்கம் போல எல்லாம் காகித சட்டங்களாகவே உள்ளன.

மொத்தத்தில் ஆண் ஆதிக்க சமூகம், நிலபிரபுத்துவம் மற்றும் மருத்துவத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியனவற்றின் கூட்டு கலவை பெண்களை வேறுபடுத்தி பார்ப்பதை வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டின் 2001 சென்சஸ், ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும், ஆண் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு எதிராகவும், பெண் குழந்தைகளை கருவிலோ, சிசுவாகவோ கொல்வதற்கு எதிராகவும், பிறப்பு விகிதம் குறைவதற்கு எதிராகவும், பெரிய அளவில் மாற்றங்கள் வர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. இப்போது மருத்துவ துறையும் நியாய அநியாயங்கள் பற்றி கவலைப்படாமல் வியாபாரமயமாகி வருகிறது. ஆண்–பெண் சேர்க்கையில் ஆண் கரு தரிக்கும் அளவுக்கு தொழில்நுட்பம் முன்னேறி வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சென்சஸ்படி சுதந்திரம் கிடைத்து 50 ஆண்டுகளுக்கு பிறகும் பெண்களில் பாதி பேருக்கு மேல் கல்வியறிவு இல்லாமல்தான் இருக்கிறார்கள். இப்போதாவது துவக்கப் பள்ளிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இலவச மற்றும் கட்டாய கல்வியை அரசு கொடுக்க வேண்டும். தாராளமயம், தனியார்மயம், என்ற கொள்கைகள் கல்வியையும் வியாபாரமாக்குவதால் ஏழைகளுக்கு கல்வியறிவு மறுக்கப்படுகிறது. பெண்ணின் திருமண வயது மற்றும் முதல் பிரசவ வயது மிக குறைவாக இருப்பது பெண்களின் வாழ்நிலை பின்னடைவை காட்டுகிறது. (உலகமயமாதல் என்ற பெயரில் இந்திய பொருளாதாரத்தை உலக அளவில் உயர்த்துவதே, இந்தியாவின் முன்னேற்றம் என்று கருதி அனைவரும் பாடுபட்டு வருகின்றனர். பெண் சிசுக் கொலை, பெண் விகிதாச்சார குறைவு என்ற அடிப்படை பிரச்சனைகளெல்லாம் இவர்கள் கண்களுக்கு தெரிவதேயில்லை. அஸ்திவாரத்தை பலமாக போடாமல், மேலும் மேலும் கட்டிடத்தை எழுப்பி என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை. கெஞ்சி கூத்தாடி ஓட்டு வாங்கி ஆட்சிக்கு வரும் எந்த அரசியல்வாதிகளும் இதைப் பற்றி வாயை திறப்பதில்லை. தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற கொள்கைகளை பின்பற்றி, தெரிந்தோ தெரியாமலோ அஸ்திவாரத்தையே ஆட வைத்துக் கொண்டிருக்கின்றனர்).

பெண்களுக்கு சரியான உணவு, கல்வியறிவு, சுகாதாரமான வாழ்வு, மருத்துவ வசதிகள் ஆகிறவற்றோடு இரண்டாம்பட்ச மதிப்பை அப்புறப்படுத்தினால் மட்டுமே இப்பற்றாக்குறை அகலும். இல்லாவிட்டால் ஒரு பெண்ணுக்காக ஆயிரம் ஆண்கள் காத்திருக்கும் நிலை விரைவில் வரலாம்.

—சாம்பவி

## வாசகர் கடிதம்

'பெண் உரிமை' ஆசிரியருக்கு தோழர் முத்து எழுதுவது, பெண் உரிமை வடிவமைப்பு சிறப்பாக உள்ளது. மே—ஜீன் பெண் உரிமையில் தலையங்கத்தில் ஜனநாயக தேர்தல் என்று எழுதியுள்ளீர்கள் இது ஜனநாயகத் தேர்தலா? 'போலி ஜனநாயகத் தேர்தல்' என்று எழுதியிருந்தால் சரியாக இருக்கும்.

வலி, ஐயா எங்கள் சாதி எது? கவிதைகள் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கிறது.

உன் அடிச்சுவட்டில் நானும் நாவல் வியட்நாம் போராளிகளின் உறுதியையும், போர்க்குணத்தையும் கண்முன் நிறுத்துகிறது.

அமெரிக்கா என்னும் அரக்கனுக்கு மரண அடி கொடுத்தது இந்த உறுதிமிக்க போர்க்குணம் தான் என்பதை உணர முடிகிறது.

தோழமையுடன்,
முத்து,



படிப்பகம்

www.padippakam.com

# சிட்டகாங் பெண் போராளி – பிரித்தி லதா



பிரிட்டிஸின் கொடூரமான ஆட்சியதிகாரத்தை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் 1940–களில் கொழுந்துவிட்டு எரிந்தன. இத்தகைய வீரமிக்க போராட்டத்தில் வங்காள சிட்டகாங் மலைகளில் மாஸ்டர் சூரியா சென் தலைமையிலான இந்திய விடுதலைப் படையில் பல பெண்கள் தங்கள் உயிரையும் துச்சமாக்கி போராட்டக் களத்தில் வீரஞ்செறிந்த பங்காற்றினர்.

சிட்டகாங் போராட்டம் என்றால் பிரித்தி லதா விதேதாரின் தியாகத்தை சொல்லாமல் இருக்க முடியாது. சிட்டகாங் மலை சிகரங்களில் பிரித்தி லதாவின் பெயர் இன்றளவும் எதிரொலித்து வருகிறது. அதிகாரிகளின் கேளிக்கை விடுதியை தாக்கியபோது பிரித்தி எதிரியால் சிறை பிடிபட்டார். பிரித்தியும், கல்பனா என்பவரும் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டனர்.

பிரித்தியின் தியாகம் பல்லாயிரம் பெண்கள் பிரிட்டிஸ் எதிர்ப்பு போராட்டத்தில் அணி திரள வழிவகுத்தது.

---

## பத்திரிகை தர்மம்

கொழுத்ததொரு பணப்பெட்டிக்குப்
பேனாவை அடகு வை.
விளம்பரம் அட்டை
நடுப்பக்கம் யாவிலும்
பெண்கள் கவனமிருக்கட்டும்,
ஆடைகள் இல்லாதிருப்பது
அதிக இலாபம் தரும்.
இரவு... இன்பம்
இத்யாதி தலைப்புகளாய்
சாக்கடைகளைப் பரிமாறும்
சரக்கு மாஸ்டர்களை
அமர்த்திக் கொள்.
நிஜக்கதை என்றும்
தலைப்பிடலாம்.
கொஞ்சம் வசதி
தவறாமல் நடிகைகளின்
நாய்பெயர் கார்நிறம்.
செருப்புவிலை இவற்றைவெளியீடு
மிச்ச இடங்களை
அரசாங்கப் புகழ்பாடி
அடைத்து விடலாம்
எச்சரிக்கை !
சுரண்டல் கொடுமை
அடக்குமுறைகள்
எதிர்த்து எழுந்துவிட்ட
மக்கள் போராட்டம்
இவற்றை மட்டும்
தவறியும் கூடப்
பிரசுரிக்கக் கூடாது.
ஆச்சு !
ஐந்து இலட்சம் பிரதிகள்
அனாயசமாய் விற்றுவிடும்
அப்புறமென்ன?
மூத்த தமிழ்குடியை
முன்னேற்றியதாக நீயும்
சுயசரிதை எழுதுகையில்
சொல்லிக் கொள்ளலாம், போ !

– இரவிக்குமார்



படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரமாம்.... சுதந்திரம் (!?)

**(ஆகஸ்ட் –15, 'சுதந்திர' தினத்தை ஒட்டி தன்னுடைய மனக்குமுறலை, சிறு கட்டுரையாக வெளிப்படுத்தியுள்ள கல்லூரி மாணவியின் படைப்பு பிரசுரிக்கப்படுகிறது – ஆசிரியர்).**

அன்பார்ந்த நண்பர்களே !

இந்தியாவிற்கு 'சுதந்திரம்' கிடைத்து இத்தோடு 54 ஆண்டுகள் நிறைவேறி விட்டன. இந்த போலி சுதந்திரத்தினால் பயனடைந்தவர்கள் யார்? என்று பார்த்தோமானால் இன்றைக்கும் உழைக்கும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் டாடா, பிர்லா போன்ற பெரிய தரகு முதலாளிகள் தான் பயனடைந்திருக்கிறார்கள். இந்த சுதந்திரம் அவர்களைப் பாதுகாக்க வாங்கியதே ஒழிய உழைக்கும் வர்க்கங்களுக்கு அல்ல சுதந்திரம்! சுதந்திரம்! என்று கூப்பாடு போடும் இவர்கள் எதை சுதந்திரம் என்று கூறுகிறார்கள்.

'சுதந்திர' நாளில் ஊழல் அரசியல்வாதிகள் என்ற (அ)சிங்கங்கள் கொடியேற்றி கோசம் போடுகின்றன. சிந்திப்பதற்கு சிந்தனையை பறித்துவிட்ட இவர்களுக்கு வந்தே மாதரம் என்ற கோசம் எதற்கு? இருதயத்தில் இரத்தக் கசிவுகளை உண்டாக்கும் இவர்களுக்கு தேசிய கீதம் எதற்கு? மனதை கசப்பினால் அலங்கரித்த எங்களுக்கு இனிப்பு ஒரு கேடா? சுதந்திரம் என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை உணராத இவர்களும் இந்த நாட்டு பிரஜையா? இந்த நாளுக்காக உறுதிமொழி ஏற்க சொல்கின்றார்கள். "என் தாய்த் திருநாட்டில் பிறந்த அனைவரும் உடன் பிறந்தவர்கள்" என்று வரதட்சணைக்காக பெண்ணைக் கொன்றவனையும் காம வெறியனையும் உடன் பிறப்புகள் என்று கூறி தேற்றுகின்றார்களோ ! இவர்கள் தங்கள் தேசத்திற்கு செய்கின்ற கடமையை எவ்வாறு பாராட்டுவது என்று தெரியவில்லை. அடிமைப்பட்டு கொண்டிருக்கும் இந்திய நாடு இவர்களின் கையில் இன்னமும் அதிகமாகவே அடிமைப்பட்டுக் கிடக்கிறது... பெண்களின் நிலையும் கூட கொடூரமாகவே உள்ளது!

பெண்களை சிறைவலையில் வைத்துவிட்ட இவர்களுக்கு "சுதந்திரம்" என்பது ஒரு தாரக மந்திரமாம்.

பிறந்தவுடன் பெண் குழந்தையை கொல்வதற்கு பெற்றோர்களுக்கு சுதந்திரம்!

பெண்களை பொருளாதார ரீதியாக அடக்கியாள ஆணாதிக்க சிந்தனையாளர்களுக்கு சுதந்திரம்!

வீட்டில் இருக்கும் பெண்ணை பத்தினி என்று சொல்லும் இச்சமூகம் தடைகளை மீறி வெளியே வரும் பெண்ணை கேவலமாக முத்திரை குத்துவதற்கு இந்த ஆணாதிக்க சமூகத்திற்கு சுதந்திரம்!



படிப்பகம்

www.padippakam.com

உலக சந்தையில் பெண்களை காட்சிப்பொருளாக்கி பஞ்சு மெத்தையில் புரள விடுவதற்கு தரகு முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சுதந்திரம்!

சிந்தனை ரீதியாக கருத்தியல் ரீதியாக முடமாக்க இந்த நாட்டு அரசியல்வாதிகளுக்கு சுதந்திரம்!

பாலியல் வன்முறைக்கு பெண்களை இரையாக்க மிருகங்களுக்கு சுதந்திரம்!

இப்படி சுதந்திரம் என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லாமல் அடிமை கோலம் பூண்ட இவ்வேளையில், இவர்கள் "சுதந்திரம்" கொண்டாடுகின்றனர்.

பெண்களை போதை பொருட்களாக, காட்சி பொருட்களாக, அடிமைகளாக இரண்டாம் தர குடிமகளாக பார்க்கின்ற இச்சமூகம் தான் சுதந்திர தினத்தை படு விமரிசையாக கொண்டாடுகிறது.

பெண்ணடிமை நிலை மிகவும் அபாயகரமாக உள்ள இவ்வேளையில், இவர்கள் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று பகல் வேசம் போடுகின்றார்கள். இந்த போலி சுதந்திர ஆரவாரங்களை முறியடிப்போம்! உண்மையான சுதந்திரத்தை அடைய சமூக மாற்ற போராட்டப் பாதையில் அணிதிரள்வோம்!

அர்ச்சனா.

---

சென்ற இதழின் தொடர்ச்சி ....

# வியட்நாமின் நீளக்கூந்தல் படை

வியட்நாம் நாடு பூரணமாக விடுவிக்கப்பட்டு மக்கள் கழகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. செப்டம்பர் 2, 1945 அன்று ஹோ சி மின் முறைப்படி சுதந்திரத்தை நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறார். புதிய சுதந்திர வியட்நாம் ஜனநாயக குடியரசின் ஜனாதிபதியாகிறார் ஹோ சி மின். 1946-ல் அமலுக்கு வந்த வியட்நாம் குடியரசின் அரசியலமைப்பு சட்டம் பெண்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்தது. வியட்நாம் ஜனநாயக குடியரசில் அரசியல்... பொருளாதார... பண்பாட்டு... சமூக... குடும்ப உரிமைகள் யாவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக இருக்கும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டது.



மக்களின் விடுதலைக்கான ஆயுதப் படை (PLAF) நிரந்தரப் படையாக உருவாக்கப்பட்டது. (வடக்கு வியட்நாமில் போரினால் ஏற்பட்ட பாதிப்புகளை நீக்கி



படிப்பகம்

www.padippakam.com

புணரமைப்பு பணிகள் நடைபெற்ற அதே வேளையில், தெற்கு வியட்நாம் அமெரிக்காவின் பிடியில் நவ காலனியாக மாறிக்கொண்டிருந்தது).

ஜனவரி 17, 1960 அன்று, வெண் த்ரே மாவட்டத்தில் மொகே பகுதியில் எழுந்த மக்கள் எழுச்சி வெற்றி பெற்று மக்கள் அதிகாரத்தை கைப்பற்றினார்கள். குயென் தி கின் தலைமையில் இந்த போராட்டத்தை நடத்திய அனைவரும் பெண்களே. வெறும் குச்சிகளையும், கோடாரிகளையும் மட்டுமே ஆயுதங்களாக கொண்ட இப்பெண்கள் ஒருவார காலத்திற்குள் 20 கம்யூன்களை விடுவித்தார்கள் – இப்படியாகத்தான் வெறும் பத்து பேர் குழுவாக இருந்த பெண்கள், ஆயிரகணக்கான போராளிகளாக அணிதிரண்டு நீளக் கூந்தல் படை உருவானது. இந்தப் படையின் ஆர்பாட்டங்கள், எதிரியின் பலத்தை குறைத்து பொம்மை அரசுப் படையையும் நிர்வாக இயந்திரத்தை முடக்கியது. இரவுகளில் படை முகாம்கள் அருகில் அமைதியான குடும்ப மற்றும் கிராம வாழ்வின் நினைவுகளை எழுப்பும் வண்ணம் பாடல்களும் கவிதைகளும் இணைந்து படையை விட்டு சிப்பாய்கள் வெளியேறிச் செல்லத் தூண்டினார்கள். 1963–ஆம் ஆண்டில் மட்டும் சைகான் ஆட்சியில் சம்பள பட்டியலிலிருந்த 45,000 சிப்பாய்கள் படையிலிருந்து விலகிவிட்டனர். அடுத்தடுத்த வருடங்களில், இந்த எண்ணிக்கை பன்மடங்காகி, சந்தை இடங்கள் கூட அரசியல் மேடைகளாக மாற்றமடைந்து விட்டன.

பெண்கள், பலர் முழு நேர போராளிகளாகவும், மக்களின் விடுதலைக்கான ஆயுதப் படையின் தலைவர்களாகவும் இருந்தனர். இப்படையின், ரெஜிமெண்டு கமெண்டர்களில் 40–சதவிகிதத்தினர் பெண்கள். எதிரிகளை பதுங்கித் தாக்குதல், படைத் தளங்களை சுற்றிவளைத்தல், முகாம்களை தாக்குதல் என கைத்தேர்ந்த கொரில்லா போராளிகளாக இப்பெண்கள் உருவாயினர்.

*1960ல் நடந்த ஒரு பிரசித்திப் பெற்ற ஆர்ப்பாட்டம் பின்நாளில் பலரும் உத்வேகம் பெற காரணமாக அமைந்தது. 'தியம்' என்ற சர்வாதிகாரியின் ஆட்கள் ஆறு கிராமங்களை கொளுத்தியதை எதிர்த்து மை தோ வின் மாகான தலைநகரில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். 'பறவை சந்திப்பு' என்னுமிடத்தில் பெண்களின் ஊர்வலம் வந்தபோது தியெமின் பெரும்படையை அவர்கள் எதிர்கொண்டனர். ஊர்வலத்தின் முன்னணியில் கொடியை ஏந்தியிருந்த கர்ப்பிணி பெண்ணை தியெமின் ஆட்கள் சுட்டுக் கொன்றனர். இறக்கும் முன் அப்பெண், 'தோழர்களே முன்னேறுங்கள்' என்று முழங்கினார். கொடியை எடுத்துக் கொண்டு முன்னால் வந்த இரண்டாவது பெண்ணும் சுட்டு வீழ்த்தப்பட்ட பின் மூன்றாவதாக ஒருத்தி... பின்பு நான்காவதாக ஒருத்தி..... இப்பெண்களின் ஈடு இணையற்ற அஞ்சா நெஞ்சத்தைக் கண்டு திகைத்து செயலற்றுப் போன படை கூட்டத்தின் ஆக்ரோஷத்தை எதிர்கொள்ள முடியாமல் பின் வாங்கியது. தொடர்ந்து கவர்னர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்ற இப்பெண்களுக்கு, எரிக்கப்பட்ட கிராமங்களுக்காகவும், புதிய தியாகிகளுக்காகவும் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை வேறு வழியின்றி கவர்னர் வழங்க வேண்டியதாயிற்று.*



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், 1966—ல் சைகோன் அரசு உருகுலைந்து வரும் நேரத்தில், தியெம் இடத்தை சர்வாதிகாரி தியு எடுத்துகொண்ட சமயத்தில், ஏறக்குறைய ஐந்து இலட்சம் அமெரிக்க சிப்பாய்களும், குண்டு வீசும் விமானங்களும் வியட்நாம் எல்லைக்குள் இருந்தன. அமெரிக்க அரசாங்கத்தின் இன படுகொலை திட்டங்களாலும் ஆதிக்கம் செய்வதிலும், சுரண்டுவதிலும் சளைக்காத தன்மையாலும் வியட்நாமிய பெண்கள் வெறும் ஒடுக்குதலுக்கு ஆளானார்கள்.

மார்ச் 16, 1968 அன்று மை லாய் கிராமத்தில் நுழைந்த அமெரிக்க இராணுவம் ஐந்நூறு பேரை படுகொலை செய்து, ஐந்நூறு பெண்களை வன்புணர்ச்சி செய்தது. அமெரிக்கப் படையினர் கடந்து சென்ற கிராமங்களில் தான், பெண்கள் ஆடைகளை களைய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். 'தேடுதல்' என்ற பெயரில் அமெரிக்க இராணுவம் கூட்டம் கூட்டமாக பெண்களை வன்புணர்ச்சிக்கு ஆளாக்குவதை திட்டமிட்டு முறையாக செயல்படுத்தியது. கலக புரட்சி மக்களை ஒடுக்குவதற்கான ஒரு யுத்தியாகவே அமெரிக்க அரசு தனது முதலாளித்துவ இன வெறியும், பாலியல் மேலாதிக்க வெறியும் கொண்ட தனது இராணுவ படைவீரர்களின் மூலம் வியட்நாமிய பெண்களை கூட்டம் கூட்டமாக வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியது. விடுதலைப் படையில் சேர்ந்து போராடுவதாக சந்தேகப்படும் பெண்களை எல்லாம், வியட்காஸ் விபச்சாரிகள் என்று பெயர் சூட்டியது. குழந்தைகள் பெற முடியாதபடி, உறுப்புக்களை சிதைத்தது. இப்பெண்களை சித்ரவதை செய்தது. இளம்பெண்கள் கடத்தி செல்லப்பட்டு, அமெரிக்க சிப்பாய்களுக்கு விநியோகம் செய்யப்பட்டனர். அமெரிக்க ஆக்கிரமிப்பின் உச்ச காலக்கட்டத்தில் தெற்கு வியட்நாமில் ஒரு அமெரிக்க சிப்பாய்க்கு ஒரு பெண் என நான்கு இலட்சம் பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இத்தகைய நடவடிக்கைகள் கூட்டு வன்புணர்ச்சிகள், கொடுமையான சித்ரவதைகள், கட்டாய விபச்சாரம் ஆகியவை வியட்நாமிய பெண்கள் மனதில், அமெரிக்க சிப்பாய்களின் மீது ஆழமானதொரு வெறுப்புணர்வை தூண்டிவிட்டு, தீவிர அரசியல் செயல்பாட்டுக்கு இட்டுச் சென்றன.

*வடக்கு வியட்நாமில் புரட்சிகர பணியை மேற்கொண்டவர்களின் மனைவியர் தியெமின் கையாட்களால் மிகுந்த கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். அறிவிக்கப்பட்ட காலத்துக்குள் தங்கள் (வடக்கே பணி புரியும்) கணவன்மாரை விவாகரத்து செய்து விட்டு மறுமணம் செய்யத்தவறிய பெண்கள் ஆங்காங்கே கூட்டாக தியெமின் ஆட்களால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டனர். "என் கணவர் என் இதயத்தில் இருக்கிறார் நான் அவரைக் கைவிடவேண்டுமானால் என்னைக் கொன்று என் இதயத்தை வெளியே எடுத்துப் பாருங்கள்" என்று தெற்கு வியட்நாமைச் சேர்ந்த பெண்ணொருத்தி சொல்லிய போது அவளைப் போன்ற எத்தனையோ பெண்களின் உணர்வுகளை பிரதிபலித்தாள். கொடுங்கோண்மை நிலவிய போதும் விடுதலை படையில் பணியாற்றிய தமது உறவினர்களைக் குறித்து தெற்கு வியட்நாமிய பெண்கள் மிகுந்த பெருமிதம் கொண்டிருந்தனர்.*



படிப்பகம்

www.padippakam.com

1970—ல் வாழ்வுரிமை காக்கும் பெண்களின் குழு என்ற வன்புணர்ச்சிக்கெதிராக சைகானில் உருவாக்கப்பட்ட அமைப்பு வலிமையானதொரு மக்கள் திரள் அமைப்பாக பிற நகரங்களுக்கும் பரவியது.

1. அனைத்து அமெரிக்க துருப்புகளையும் உடனடியாக திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.

2. தியுவை பதவியிறக்க வேண்டும்.

3. புதிய அரசு அமைக்க வேண்டும்.

4. பெண்களின் கௌரவத்தையும், சிவில் உரிமைகளையும் மதிக்க வேண்டும்.
என்ற நான்கு கோரிக்கைகளுடன் இவ்வமைப்புத் தொடங்கப்பட்டது.

தொடர்ச்சியாக பெண்கள் பெரும் எண்ணிக்கையில் சேர சேர விடுதலைப் படை பலமடைந்தது. சித்ரவதை முகாம்களுக்கு செல்வதைவிட பெண்கள் தத்தமது கிராமத்து ஆயுதப் படையில் சேர்ந்து அல்லது சிறப்பு பெண்கள் படையில் சேர்ந்து தங்களை காத்துக் கொள்ளவே முன் வந்தனர். இப்படியாக, மக்கள் யுத்தத்தில் பெண்களின் பங்கு தீர்மானகரமாக உருவாகியது. படையின் பின் அணியில் ஆண்களுக்கு பதிலாக பெண்கள் பொறுப்பேற்றனர். நகரத்துப் பெண்கள் சுலபமான அல்லது வாழ்நிலையை நுறந்து கிராமப்புறங்களில் சென்று விவசாய மக்களுடன் சேர்ந்து, உற்பத்திப் பணிகளில் பங்கேற்றனர். அதுபோல், விவசாய பெண்கள் விவசாய வேலை தவிர பதுங்கு குழிகள் வெட்டுவது போன்ற பணிகளை மேற்கொண்டனர். பள்ளி, கல்லூரி மாணவிகள் சீரமைப்புக் குழுக்களிலும், எதிர் நடவடிக்கை குழுக்களிலும் ஊக்கமுடன் சேர்ந்து கொண்டனர். குழந்தைகள் உணவும் தகவல்களும் பரிமாற, வயது முதிர்ந்த பெண்கள் ஆயுதங்களையும் அரிசியையும் கடத்திச் செல்ல உதவினர். உடல் நலமற்றோர் கூட விடுதலை அடைய மருத்துவமனையில் பணி செய்தனர். தகவல் தொடர்பு, உணவு மற்றும் தளவாட பொருட்களை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புதல், உணவு உற்பத்தி, விடுதலை படையினருக்காக ஆடை நெய்தல், தெற்கே படை முன்னணியில் பணி செய்து கொண்டு வடக்கே சுதந்திரத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் பணி என ஒவ்வொரு பெண்ணும் உபயோகமான பணி ஒன்றை செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. அரசியல் கல்வியும் போராட்டப் பயிற்சியும் காலனிய தாக்குதலையும் எதிர்கொள்வதற்கான புதிய புதிய ஆயுதங்களாக மாறிப் போயின.

*லீ தீ ஹாங் காம் என்ற மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த வீராங்கனை கொரில்லா ஆனது அவளது பதினாறாவது வயதில், தன் பிரிய சிநேகிதி வன்புணர்ச்சிக்கு பின்பு கொலைக்கும் ஆளானதை கண்கூடாக அவள் பார்க்க நேர்ந்தது. பத்தொன்பது வயது முடிவதற்குள் அவள் போராட்டங்களில் இருபத்தாறு எதிரிப்படையினரைக் கொன்றாள். இதுபோன்ற வீரச் செயல்களை லீ தீ ஹாங் போல எத்தனையோ பெண்கள் மேற்கொண்டனர்.*



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிரி ராணுவ சிப்பாய்களுக்கென அமைக்கப்பட்ட பங்கீடு மற்றும் சேவை கமிட்டிகளில் அரசியல் பணி செய்ய விருப்பத்துடன் பெண்கள் முன் வந்தனர். அதே போல படை சிப்பாய்களில் வளர்ப்பு தாய்மார்களின் கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டது. ஆனால் சுயமரியாதையும் விடுதலை உணர்வும் கொண்ட மக்களின் அபாரமான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலடியாக அமெரிக்க அரசு தெரிவித்த ஒரே பதில் விளைவுகளைப் பற்றி கவலைப் படாமல் நாசவேலை செய்தது ஒன்றே. தெற்கு வியட்நாமில் விளை நிலங்களில் 60 சதவீதம் இரசாயனங்களைத் தூவி தரிசு நிலமாக்கியது. வியட்நாம் மக்களை – அந்த இனத்தையே அழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. "ஏஜன்ட் ஆரஞ்சு" என்ற நாசக்கார இரசாயனம் தெற்கு வியட்நாம் முழுவதும் தெளிக்கப்பட்டது. இதனால் கர்ப்பத்தில் உள்ள குழந்தைகளின் உடல் சிதைவுற்று ஊனமுற்ற குழந்தைகள் பிறக்கத் தொடங்கின. கை, கால்கள் இல்லாமல், சிறுநீரகம் இல்லாமல், தண்ணீர் சுரப்பிகள் இல்லாமல், மூளை சிதைந்த குழந்தைகள் பிறந்தன. தாக்குதலுக்கு உள்ளான பகுதிகளில் பெண்கள் இடைவிடாது இன்னல்களுக்கு ஆளாயினர். குண்டு வீசி, எரிக்க முடியாத இடங்களை எல்லாம் வெள்ளம் சூழும்படி செய்து எண்ணற்ற பெண்களையும் அவர்களின் குடும்பங்களையும் வீடு இழக்கச் செய்தனர். இத்தனைக் கொடுமைகளை சந்திக்க நேர்ந்தும் பெண்கள் நம்பிக்கை இழக்கவும் இல்லை கொடுமைகளைக் கண்டு அஞ்சி ஒடுங்கவும் இல்லை.

போராடும் பெண்களுக்கு என தனி சித்ரவதை முறைகள் பயன்படுத்தப்பட்டன. விசாரணை செய்பவர் முன் நிர்வாணமாக பலமணி நேரத்திற்கு பெண்கள் நிற்க வைக்கப்பட்டனர். கணிந்த நெருப்பாக மாறிய கறித்துண்டுகள் பெண்களின் யோனிக்குள் நுழைக்கப்பட்டது. உடல் மீது பல்லிகள் எரியும் சிகரெட் முனைகள் ஆகியவற்றைக் கொண்டு துன்புறுத்தப்பட்டனர். போராடும் பெண்களுக்கான தனிச் சிறையிலிருந்த ஆயிரக்கணக்கான பெண்கள் சித்ரவதை, பட்டினி, எலிகள், புழு பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை தாங்கி முடிவற்ற மனித மன உறுதியும் எதிர்ப்புணர்வும் சாதிக்கக் கூடியது எவ்வளவு என்பதற்கு வாழும் உதாரணங்களாக திகழ்ந்தனர்.

*1968–ல் டெட் தாக்குதலின் போது தேசிய விடுதலைப் படை சைகானில் உள்ள அமெரிக்க தூதரகத்தை கைப்பற்றி ராணுவ மற்றும் ஆட்சி கவிழ்ப்பை சாதித்தது. இந்தச் செய்தி அனைத்து செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்ட போதும், அமெரிக்க தூதரகத்தின் ஏழு மாடிகளில் ஐந்து மாடிகளை பெண் கமாண்டோக்கள் தான் ஆக்ரமித்தனர் என்றோ, இருநூறு அமெரிக்க தூதரக ஆட்களைக் கொன்றனர் என்றோ, தூதர் பங்கரை ஓடச் செய்தனர் என்றோ இச்செய்தியில் தெரிவிக்கப்படவில்லை. இந்த நடவடிக்கையை மேற்கொண்ட பெண்களின் குழு, தெற்கு வியட்நாமிய விடுதலைக்குரிய பெண்கள் சங்கத்தின் துணைத் தலைவரும், தேசிய விடுதலைப் படையின் மத்திய குழு உறுப்பினருமான லீ தி என்பவரின் பெயரைக் கொண்டதாக இருந்தது. தூதரகம் கைப்பற்றப்பட்ட ஒருசில மணி நேரங்களில் லீ தி மரண தண்டனை அடைந்தார். இதற்கு எதிர் வினையாக வடக்கு மாகாணப் பெண்கள் இக்கொலைக்கு வஞ்சம் தீர்க்க 44392 கூடுதல் மணி நேரங்கள் பணி செய்து, தங்கள் உழைப்பால் விளைந்த பயன் அமெரிக்க எதிர்ப்பு போர் நடவடிக்கைக்கு பயன்படும் என்று உரைத்தனர்.*



படிப்பகம்

www.padippakam.com

இறுதியில் அனைத்து போராட்டக் காலங்களில் தீரமிக்க பெண்களும் ஆண்களும் காட்டிய தன்னிகரில்லா போர்த் திறமையின் விளைவாக தியுவின் படை முறியடிக்கப்பட்டது. ஏப்ரல் 30, 1975 அன்று மாகாண புரட்சிகர அரசுகளின் கொடிகள் சைய்கானுக்குள் பிரவேசித்த விடுதலைப் படை டேங்குகளை ஆரவாரத்துடன் வரவேற்றன. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக பெண்கள் படையும் ராணுவ பிரிவுகளும் இறுதி வெற்றியை சாத்தியமாக்கியதில் தங்களின் பங்கை பெருமிதத்துடன் உணர்த்தும் வண்ணம் அணிவகுப்பு நிகழ்ச்சியை நிகழ்த்தின.

இவையெல்லாம் வியட்நாமிய பெண்களின் வீரத்திற்கும், சாதனைகளுக்கும் சான்றான ஒரு சிலத் துளிகளே. வியட்நாமிய போர் வரலாற்றில் பெண்களின் பங்கு குறித்து சொல்வதற்கு இன்னும் அநேகம் உண்டு. சிலசமயம் ஒரு புதிய சமுதாயத்தை ஆயிரக்கணக்கான எதார்த்த மற்றும் நுண்ணிய தடைகளை மீறி சாதிப்பது என்பது நம்மில் பலருக்கும் ஒரு ஆயாசமான விஷயமாக தோன்றலாம். எனவே தான் வியட்நாமிய பெண்களின் சாதனைகளுக்கு அப்பெண்கள் புரட்சிகர விடுதலைப் போரில் ஆற்றிய ஊக்கமான பணிகளும், தீர்மானகரமான நடவடிக்கைகளுமே காரணமாக அமைந்தன என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்வது முக்கியம்.

*மிருகத்தனமான தாக்குதலுக்கும், சுரண்டலுக்கும் ஆளாகி பெரும் லாபம் ஈட்டுவதற்காக எதிரியால் விபச்சார தொழில் செய்ய சந்தைப் பொருளாக மாற்றப்பட்ட போதும் பெண்கள் மக்களுக்கு சேவை செய்வதில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளவில்லை. மாறாக, விடுதலைப் போரில் தங்கள் பங்கினை ஆற்ற பல்வேறு வழிகளைக் கண்டறிந்தனர். விடுதலைப் படைகளுக்கு தளவாட பொருட்களும், ஆயுதங்களும், தகவல்களும் அனுப்பப்படும் வழிகளை எப்போதும் பின்பற்றி விடுதலைப் போருக்கு தம்மால் இயன்ற வகையில் எப்போதும் பணி செய்து வந்தனர். எதிரிகளை நிர்மூலமாக்கும் நாசகர வேலைகளில் அவர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். பிரெஞ்ச் துறைமுகங்களில் மூன்றில் ஒரு பங்கு நிர்மூலமாக்கப்பட்டது, வியட்நாமைச் சேர்ந்த (கட்டாயமாக) விபச்சார தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்களின் சாகசமே என்று ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.*

ஆணாதிக்க சமுதாய அமைப்பு தங்களுக்குள் அடித்து இறக்கி இருந்த பணிவும், அமைதியும், தவிர்த்து அரசியலமைப்பை மாற்றும் மக்கள் யுத்தத்தில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு முன் அவர்கள் தத்தமக்குள் இடைவிடாது பல போராட்டங்களை நிகழ்த்த வேண்டி இருந்தது. ஆணாதிக்க மதிப்பீடுகளினால் புழுத்து போயிருந்த ஆண்களை எதிர்த்து அந்த மதிப்பீடுகளை அவர்கள் கைவிடவும், பெண்களின் உள்ளார்ந்த திறமைகளை உணர்ந்து அவற்றை வளர்த்துக் கொள்ள ஊக்கமளிக்கவும், தயார்படுத்த இப்பெண்கள் நடத்திய போராட்டங்கள் ஏராளம். பெண்களின் உண்மையான மதிப்பை உணர்ந்து முக்கியமான பொறுப்புகளை வழங்கி அவர்களை கௌரவிக்கும் தன்மையை உருவாக்க இப்பெண்கள் உடல்ரீதியாகவும்,



படிப்பகம்

www.padippakam.com

மன ரீதியாகவும் இரட்டிப்பு உழைப்பை செலுத்தி மேற்கொண்ட முயற்சிகள் எண்ணற்றவை. தமக்குரிய வாய்ப்புகள் மிகக் குறைவானவையாக இருந்தாலும் தமக்கென வழங்கப்பட்ட பொறுப்புகளை அனைத்து தடைகளையும் தகர்த்து, ஒடுக்குமுறையையும், அடிமைப்படுத்தலையும் எதிர்த்து முற்போக்கு சிந்தனையையும், செயலையும் மேற்கொண்டு இப்பெண்கள் சாதித்தவை எத்தனையோ. இதுவரை பெண்களால் இயலாதவை எனப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் கற்று செயலாற்றி இவர்கள் வரலாறு படைத்தார்கள்.

பெண்களும், குழந்தைகளும், வயதானவர்களும் கடுமையான ஒடுக்குமுறையினிடையே எழுதவும் படிக்கவும் சிந்தக்கவும் செயலாற்றவும் கற்றுக் கொண்டனர்.

இன்று நாம் எதிர் கொள்ளும் நாசக்கார அரக்கர்களை அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கைக்காரர்களை வியட்நாமிய பெண்கள் நாங்கள் வெல்வது உறுதி என்ற திடமான நம்பிக்கையுடன் அசைக்க முடியாத மனத்தின்மையுடன் எதிர்த்து போராடினார்கள்.

தங்கள் சொந்த நலனை விட கொள்கைகளையே அதிகமாக மதித்த காரணத்தால் இவர்கள் எவ்வித சமரசத்திற்கும் உடன்படவில்லை. கொடுமையான மன உளைச்சலும், பட்டினியும், சிறைக் கொடுமைகளும் இப்பெண்களின் மன உறுதியை குலைப்பதற்கு பதிலாக மேலும் மேலும் பெண்கள் விடுதலைப் படையில் சேர்வதற்கு உந்து சக்தியாக விளங்கின.

இவர்களின் விடுதலைக்கான தாகமே உலகெங்கிலும் உள்ள சகோதரிகள் யாவர்க்கும் உத்வேகமூட்டும் வீரக்கதைகளாயின.

எனவேதான் இப்பெண்களின் வரலாறு நமக்கெல்லாம் அறிந்து கொள்ளவும் பின்பற்றவும் ஓர் அற்புதமான அனுபவமாக என்றென்றும் திகழ்கிறது.

அன்பார்ந்த நண்பர்களே!

'பெண் உரிமை'யைப் படியுங்கள்

உங்கள் நண்பர்களுக்கு

அறிமுகப்படுத்துங்கள்; விமர்சனங்களையும்,

படைப்புகளையும் தவறாமல் அனுப்புங்கள்.

— *ஆசிரியர்*



படிப்பகம்

www.padippakam.com

# கோவணக் கொடிகள்

அயிற்றுக்குச் சோறிட்டவர்களின்
வயல்களெல்லாம் – இங்கே
வறண்ட பாலைவனங்களாய்
காவிரியுண்டு
வைகையுண்டு
கவலை தீர்க்க ஒரு நதியும்
உதவவில்லை.

எங்களுக்கும்
எங்களை ஆள்பவர்களுக்கும்
நிறையவே ஒற்றுமை
நாங்கள் ஏ(ர்) ரோட்டி
அவர்கள் கா(ர்) ரோட்டி

கறுத்த உடலோடு
வெள்ளை அரிசியை
உற்பத்தி செய்கிறோம் – நாங்கள்

வெள்ளை உடையோடு
கருப்புப் பணத்தை
உற்பத்தி செய்கிறார்கள் – அவர்கள்
சுரண்டுகிறோம்
உண்பதற்குச் சட்டியை – ஆம்

அவர்களும் சுரண்டுகிறார்கள்
ஒட்டியாணம் கட்டிக்கொள்ள நாட்டை.

செந்நீரும்
கண்ணீரும் சிந்துகிறோம்
பூமியைப் பதப்படுத்த

கொலையும் கொள்ளையும்
நடத்துகிறார்கள் பதவியை பலப்படுத்த.

பயிர்மாற்றம் செய்கிறோம்
நாங்கள்
கட்சிமாற்றம் செய்கிறார்கள்
அவர்கள்.

எங்கள் வாழ்க்கையில்
கோடைகாலம் குளிர்காலம்
அவர்கள் வாழ்க்கையில் ஏசி காலம்.

பயிர்களில் களையெடுக்கிறோம்
களைகளில் பயிரெடுக்கிறார்கள்
அவர்கள்.

புட்டியாலும் குட்டியாலும்
அவர்களுக்குள் மயக்கம்

சட்டியில் சொட்டு கூழும் இல்லாததால்
எங்களுக்குள் கலக்கம்.

உழைத்து உழைத்து
ஓடாய்ப் போன வயிற்றுக்கு
உண்பதற்குப் பிடி சோறுமில்லை
பருகுவதற்கு குடி நீருமில்லை.

ஓட்டைப் பானையில்
ஊற்றிய நீர்
தாகம் தீர்க்கவில்லை.
ஒட்டிய வயிற்றோடு
நாங்கள் போட்ட ஓட்டுக்கும் இங்கே
அர்த்தமில்லை.

ஓட்டு வாங்கிக் கொண்ட அவர்கள்
எங்கள் கையில் கொடுத்துவிட்டார்கள்
'ஓட்டை'.

வானம் கூட
எங்களுக்காக
வருத்தப்படாததால் தண்ணீரால்
நிரம்ப வேண்டிய
ஓடுகள் கூட
எங்கள்
கண்ணீராலேயே நிரம்புகிறது.

கோடி கோடியாய் கொள்ளையடித்தாலும்
அந்த பேடிகளின் அரசாட்சியில்
கொடியாய் பறப்பதெல்லாம்
எங்கள் கோவணங்களே !

– கவீனா ப்ரியா



படிப்பகம்

www.padippakam.com

# தலித் பெண்கள் மீதான வன்முறை

*(கல்கத்தாவில் 25-8-2001, 27-8-2001 வரை நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இங்கு வெளியிடப்படுகிறது - ஆசிரியர்)*

பெண்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகளை உருவாக்குவதில் வர்க்கம் மற்றும் சாதி முக்கியப் பங்கு வகிக்கிறது. சமூக கட்டமைப்பின்படி பார்த்தால் மிகவும் அடி நிலையில் நசுங்கிக் கொண்டிருப்பவர்கள் தலித் பெண்களே. தினம் தினம் சாதி அவமானம், ஆதிக்க சாதியினரின் பாலியல் வக்கிரத் தொல்லைகள், தங்கள் சாதியினிரின் ஆணாதிக்கத் தொல்லைகள், கடின உழைப்பு, காய்ந்து வறண்ட வாழ்க்கை, பாரமாய் கணக்கும் சொந்த பிள்ளைகளின் கண்ணீர், பசியின் தாக்குதல் எனப் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகின்றனர்.

இது மட்டுமில்லாமல், வன்புணர்ச்சி, வன்முறைத் தாக்குதல் இவற்றின் உச்சக்கட்டமாக சித்ரவதைக்குட்படுத்தி கொலை செய்தல், தலித் பெண்களின் வாழ்க்கையில் சாதாரண நிகழ்வாக மாறிவருகிறது.

தமிழகத்தில் 1995 முதல் 2001 ஆகஸ்ட் வரை தலித் பெண்களின் மீதான வன்முறை குறித்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கிடைத்த தரவுகளில் சில பிரச்சனைகள் குறித்து இங்கு விரிவாகக் காணலாம்.

## அதிகாரத்திலுள்ள தலித் பெண்கள் மீதான வன்முறை

அண்மைக் காலமாக தமிழ்நாட்டில் அதிகாரத்தில் இருக்கக் கூடிய தலித் பெண்கள் மீதான வன்முறையையும் ஒடுக்குமுறையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதன் உச்சக்கட்டமாக அவர்களை கொலை செய்தலும் நடக்கிறது. ஆளும் வர்க்கமும். ஆதிக்க சக்திகளும் திட்டமிட்டே தலித் பெண் ஆட்சியாளர்களை ஒடுக்குகின்றனர். தலித் ஆண்கள் ஆட்சிக்கு வருவதையே தாங்கிக்கொள்ள இயலாத சாதீய சமூகம் தலித் பெண்களின் அதிகாரத்தின் கீழ் செயல்படுமா?

1) ஊரப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவி மேனகா, அரசுக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தவர்களைத் தடுத்து நிறுத்தியதால், அவரது அலுவலகத்திலேயே அதிகார கும்பலால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். அவர் கொல்லப்பட்டதற்கு மற்றொரு காரணம், தேர்தலில் சட்டமன்றத் தொகுதிக்குப் போட்டியிட்டு வெற்றிபெற வாய்ப்பிருந்தது என்பதும் தான்.

2) பீமன் தோப்பு கிராமத்தைச் சேர்ந்த கிராமத் தலைவி சரோஜா, தன் கிராமப்புறப் பெண்களோடு சேர்ந்து சாராய ஊரல் பானைகளை உடைத்தெறிந்து கள்ளச்



படிப்பகம்

www.padippakam.com

சாராயத்தை ஒழிப்பதற்காகப் போராடினார். இதன் காரணமாக அவரது மகள் இந்திராவையும் சகோதரி ரத்தினத்தையும் ஆதிக்க சக்திகள் வெட்டிச் சாய்த்தனர்.

3) காஞ்சிபுரம் மாவட்டம் வெள்ளைப்பந்தூர் ஊராட்சி மன்றத்தலைவி ரங்கநாயகி, தனது பதவியைப் பயன்படுத்தி எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் (அ) இருளர் குடும்பத்திற்குப் பட்டா வாங்கிக் கொடுத்தல், (ஆ) வறுமையில் உள்ள பள்ளி செல்லும் மாணவிகளுக்கு அரசு உதவித் தொகை பெற்றுக்கொடுத்தல் (இ) சாராய பீப்பாய்களைக் கண்டுபிடித்து போலீஸில் தெரிவித்தல் போன்றச் செயல்களை செய்ததினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இரு ஆண்டுகள் பெரும் போராட்டத்திற்கு பிறகு, ரெங்க நாயகி மீண்டும் பணியில் அமர உத்தரவு வழங்கப்பட்டது.

தலித் ஊராட்சி மன்றத் தலைவிகள் தங்களுடைய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த முடிவதில்லை. ஒவ்வொரு காசோலைகளிலும் ஊராட்சி மன்றத் தலைவரோடு உப தலைவரும் சேர்ந்து கையெழுத்திட வேண்டும். இந்த உபதலைவர்கள் பெரும்பாலும் உயர் சாதி ஆண்களாக இருப்பதால் கையெழுத் திடுவது கிடையாது. இந்த உபதலைவர்கள் முன்னிலையில் தலித் தலைவிகள் அமரக்கூடாது என்பதும் எழுதப்படாத சட்டமாகும். ஊராட்சி மன்றத் தலைவிகள், உபதலைவர்களின் கைபாவையாகவே செயல்படுத்தப்படுகின்றனர். இதற்கு காரணம் உபதலைவர்களின் நிலத்தில்தான் இவர்கள் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம். உயர்சாதி மற்றும் அதிகார வர்க்கத்தினரின் நலனைப் பேணிப்பாதுகாக்க மறுக்கும் தலித் பெண்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவதும், தேவைப்படின் கொல்லப்படுவதும் நடந்து கொண்டிருக்கிறது. 33% இடஒதுக்கீடு மூலம் பதவிக்கு வந்த தலித் பெண்களுக்கு இச்சமூகத்தில் எந்த விதப் பாதுகாப்பும் இல்லை.

## போராட்டங்களின் போது பாதிக்கப்படும் தலித் பெண்கள்

தலித் மக்களை ஒடுக்குவதற்காக தூண்டப்படும் சாதிக் கலவரங்களால், தலித் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமில்லை. அசிங்கமான பேச்சுகள், அடிதடி, பாலியல் வல்லுறவு சித்ரவதை, கொலை என்று கொடுமைகளின் எல்லாப் பாகங்களையும் தலித் பெண்கள் கலவரங்களின் போது எதிர்கொள்கின்றனர். உதாரணமாக

## குண்டுப்பட்டி போராட்டம்

திண்டுக்கல் மாவட்டம் குண்டுப்பட்டியில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாததால் அக்கிராம மக்கள் அரசியல்வாதிகள் மீது கோபப்பட்டு 1998 நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணித்தனர். அதைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த அரசியல்வாதிகள், குண்டர்களையும், காவல் துறையையும் கைக்குள் போட்டுக்கொண்டு குண்டுப்பட்டி கிராம ஆண்கள் வேலைக்குப் போயிருந்த நேரம் பார்த்து ஊருக்குள் புகுந்து தலித் பெண்களை கடுமையாகத் தாக்கினர். வீடுகளையெல்லாம் சூரையாடி, உடைமைகளை நாசப்படுத்தினர். அதைத் தடுத்த பெண்கள் தாக்கப்பட்டனர். பின் எல்லோரையுட் ஓரிடத்தில் கூட்டி உட்கார வைத்து,



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் அங்கங்களைப் பற்றி அசிங்கமாகக் கேள்வி கேட்டு புண்படுத்தியுள்ளனர். அந்த இடத்தை சுத்தமா சேவ் பண்ணி வச்சிருக்கீங்களாடி அப்பத்தான் எங்களோடது ஈசியாக உள்ள போகும் உங்க மூஞ்சிகளைப் பார்த்தால் எங்க சுன்னி கூட எந்திரிக்காது என்று கேட்க முடியாத மிகக் கேவலமான வார்த்தைகளால் திட்டியுள்ளனர். தன் 5 மாதக் குழந்தை பசிக்கு அழுத போது பால் கொடுக்கச் சென்ற பெண்ணை உங்கிட்ட பால் நிறையா இருந்தா எங்களுக்கும் கொடு என்று சொல்லி குழந்தையைப் பிடுங்கித் தூக்கி எறிந்துள்ளனர். இதுபோல் வெறும் வார்த்தைகளால் படுத்திய கொடுமை பத்தாதென்று, தடிகளால் அடித்து, முடியைப் பிடித்து இழுத்து, பூட்ஸ் காலால் எட்டி உதைத்து சித்ரவதைக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

## ஜாலியன் வாலாபாக் என்று வர்ணிக்கப்படும் தாமிரபரணி போராட்டம்



திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு 1999 ஜூலையில் பெரிய பேரணியை நடத்தினார்கள். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களை திடீரென காவல் துறையினர் தாக்கினர். தப்பிக்க முயன்று ஆற்றுக்குள் இறங்கியவர்களை விடாமல் காவல் துறையினர் துரத்தித் தாக்கியதில் 17 பேர் கொல்லப்பட்டது நாமனைவரும் அறிந்ததே ! உதவிகேட்டு பெண் போலீஸாரிடம் சரணடைந்த பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு காவல் நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டனர். இவை மட்டுமின்றி, 'பள்ளச் சிறுக்கி' 'பறத் தேவிடியா' என்று வசவுகள் மூலம் தங்கள் சாதிய வக்கிரத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

கலவரங்களைத் தொடர்ந்து நடந்த விசாரணை கமிசன்கள் எதுவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாதகமான எந்தத் தீர்ப்பையும் இதுவரை குண்டுபட்டிக்கு அளிக்கப்பட்ட முருகேசன் கமிசன் தனது அறிக்கையில் வழங்கவில்லை. குண்டுபட்டிக்கு மக்கள் வன்முறையை கையாண்டதே போலீஸ் தாக்குதலுக்குக் காரணம். குண்டுப்பட்டி மக்கள் இயல்பிலேயே வன்முறையை அடிப்படையாகக் கொண்டிருப்பவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தாமிரபரணிக் கலவரத்திலும் 17 பேர் நீச்சல் தெரியாததால் மூழ்கி இறந்தார்கள். இங்கு பெண்களுக்கு எந்த தீங்கும் நிகழவில்லை என மோகன் கமிஷன் அறிக்கை பரிந்துரை செய்தது.

## சட்டமும் பெண்களும்

இந்திய அரசியல் அமைப்பு சாசனம், ஆணும், பெண்ணும் சமம் எனப் பறைசாற்றுகின்றது. பெண்களின் உரிமையைப் பேணிக்காக்க தனித்தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. குறிப்பாய் வரதட்சணை, பெண்களைக் கேலி, கிண்டல் செய்தல், அலுவலகங்களில் வேலை செய்யும் பெண்களை செயல் மூலமாகவோ, அல்லது வார்த்தைகளின் மூலமாகவோ மன அழுத்தத்திற்கு உள்ளாக்குவது போன்றவற்றிற்கு



படிப்பகம்

www.padippakam.com

எதிராகவும், தினக்கூலியில் பாரபட்சம், தீண்டாமை வன்புணர்ச்சி போன்றவற்றிற்கு எதிராகவும் சட்டங்கள் உள்ளன.

தலித் மக்களின் உரிமைகளைக் காக்க

1. தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் (Prevention on atrocities SC/ST act)

2. மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் (Prevention on civil rights act) போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. மேற்கூறிய சட்டங்கள் யாவும் வெற்றுக்காகிதங்களாக இருக்கிறதேயன்றி நடைமுறையில் செயல்படுத்தப்படுவது கிடையாது. உதாரணமாக....

கடலூர் ஆதனூரை சேர்ந்த பொன்.னருவி, உயர் சாதியைச் சேர்ந்த ராஜசேகரனை காதலித்த ஒரே குற்றத்திற்காக கொடூரமாக கூட்டு வன்புணர்ச்சிக்கு இரையாக்கப்பட்டு 18–01–1999 அன்று கொல்லப்பட்டார்.

## வழக்கு

இது பற்றி கம்மாபுரம் காவல் நிலையத்தில் முறையான புகார் கொடுக்கப்பட்டும், இதைச் சந்தேக மரணம் என்றே காவல்துறையினர் பதிவு செய்துள்ளனர். இவ்வளவு கொடூரமாக வன்புணர்ச்சிக்கு இரையாக்கப்பட்டு கொல்லப்பட்ட பொன்னருவி வழக்கில், கீழ்நீதி மன்றம் 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு காமவெறியர்களை தூக்கிலிட உத்தரவிட்டது. ஆனால் உயர்நீதி மன்றமோ சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியங்களை பொய்யாக்கியும், கொலையுண்ட இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் நான்கு வாரங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்டன என்பது போன்ற அற்ப காரணங்களை சுட்டிக்காட்டியும் கயவர்களை வெறுமனே விடுவித்து விட்டது. 'தீவிர விசாரணை' என்ற பெயரில் 6 வருடம் நடந்த ஆய்வுக்குப் பின் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்ட பொன்னருவிக்கு தலைமை நீதிமன்றம் வழக்கம்போல துரோக தீர்ப்பையே வழங்கியது. இத்தீர்ப்பு தலித் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரிக்கவும், காமுகர்கள் தலித் பெண்களைக் கொண்டு தங்கள் காம இச்சைகளை பூர்த்தி செய்து கொள்வதோடு, நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில் கொலையும் கூட செய்துவிட்டு, எந்தவித குற்ற உணர்வோ, பயமோ, இன்றி வீதியில் உலா வர வழி வகுக்கிறது.

மேற்குறிப்பிட்ட வழக்குகளைத் தவிர பலநூறு தலித் பெண்கள் மீதான வன்முறை வழக்குகள், ஆண்டுக்கணக்காக நீதிமன்றங்களில் 'விசாரணை' என்ற பெயரில் தேக்க நிலையிலேயே உள்ளன. பெரும் அலைகழிப்புக்குப் பின் வழங்கப்படும் தீர்ப்புகளும், பொன்னருவி வழக்குத் தீர்ப்பைபோல தலித் பெண்களுக்கு சந்தி வழங்குவதாகவே உள்ளன. காவல் நிலையங்கள் கற்பழிப்பு நிலையங்களாக செயல்படுவதாலும், நீதி மன்றங்கள் பெண்கள் விரோத தீர்ப்புகளையே தொடர்ந்து வழங்குவதாலும், பல இலட்சக்கணக்கான தலித் பெண்கள் மீதான கொடுமைகள் பதிவாவதேயில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இத்தனை பெருந்துயரங்களைச் சொல்லி அழவோ, ஆறுதல் பெறவோ, முடியாத தலித் பெண்களின் கண்ணீர், ஒட்டு மொத்த சமூகத்தால் உதாசீனப்படுத்தப்படுகிறது. இன்றைய சீர்கெட்ட சமூகத்தில் ஏதோ சில சட்டங்களாலும், சீர்திருத்தங்களாலும் தலித் பெண்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. தலித் பெண்களின் விடுதலைக்கு சமூக மாற்றம் ஒன்றே தீர்வாக இருக்க முடியும். சமூக விடுதலை என்பது பெண்களின்றி இயலாது. பெண் விடுதலை என்பது சமூக விடுதலைக்கான அடிப்படை. தலித் பெண்களின் விடுதலைப் பற்றி பேசாமல் ஒட்டுமொத்த பெண்விடுதலை என்பது சாத்தியமேயில்லை. பெண் இயக்கங்களும், ஜனநாயக சக்திகளும் ஒடுக்கப்படும் மக்களோடு ஒன்றுசேர்ந்து சமூக மாற்றப் பாதையில் போராடினால் மட்டுமே தலித் பெண்களின் விடுதலை சாத்தியமாகும்.

பெண்கள் மீதான வன்முறையை எதிர்க்கும்
பெண்கள் குழு, தமிழ்நாடு.

## ஏர்வாடியில் விபரீதம்

ஆகஸ்ட் 7ம் தேதிக்கு முன் இம்மனிதர்கள் சங்கிலியால்தான் கட்டப்பட்டிருந்தனர். மிக மோசமான சுகாதார மற்ற இடங்களில்தான் தங்க வைக்கப்பட்டிருந்தனர். பசியைக் கூட போக்கமுடியாத அளவிற்குண்டான, சத்தில்லாத உணவுகள்தான் இவர்களுக்கு உயிர் கொடுத்து வந்திருக்கின்றன. கைகால்களில் சங்கிலியோடு அவர்கள் பிச்சையெடுக்க அனுமதிக்கப்பட்டார்கள். இந்தக் கொடுமைகளெல்லாம் 25 உயிர்கள் ஏர்வாடியில் கரிக்கட்டையாய் கருகிய பின்புதான் வெளி உலகுக்கும், அரசுக்கும் தெரியவந்தது. ஏன் ராமநாதபுர மாவட்ட கலெக்டருக்குக் கூட தெரியவந்திருக்கிறது.



அதன்பின்தான் அரசும் மனநலக் காப்பகங்களுக்குரிய விதிகளை ஞாபகப்படுத்தியது.

"மனநோயாளிகள் சங்கிலியால் கட்டப்படக்கூடாது. அவர்களை பிச்சை எடுக்கத் தூண்டக்கூடாது. காப்பகத்தைச் சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். பெண் மனநோயாளிகளை 2 மாதம் கழித்து வீட்டிற்கு அனுப்பிவிடவேண்டும். மனநோயாளிகள் சேர்க்கையில் புரோக்கர்கள் தலையீடு இருக்கக்கூடாது. சுகாதாரத் துறையினர் தினமும் போய் மனநோயாளிகளை பார்க்க வேண்டும்". இந்த ஒழுங்கு முறைகளொன்றும், அக்கறையோடு எழுதப்பட்டதல்ல. அதன் பின்னணியும் இதேபோல் சோக சம்பவத்தைக் கொண்டதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

ஏப்ரல் 2000–ல் இதே ஏர்வாடியில் 8 பேர் பேதியில் பலியான பின்புதான் ஆவேசமாக மாவட்ட மனநல காப்பகத்திற்கான கமிட்டி கூட இந்த விதிமுறைகளை விதித்தது. அதுமட்டுமில்லை 1998 ஜீலை ராமநாதபுரம் கலை கல்லூரியின் முதல்வர் நஸ்னீன், மதுரை கோரிப்பாளையம் சுல்தான் அலாவுதீன் தர்காவில் நடந்த இதுபோன்ற கொடுமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அதில் ஏர்வாடியும் இடம் பெற்றிருந்தது. ஆனால் இந்த அறிக்கை மிகைப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற அப்போதைய அம்மாவட்ட கலெக்டர் நஸ்னீன் அறிக்கையை தடை செய்துவிட, நஸ்னீன் தேசிய மனித உரிமை கமிஷனுக்கு இதை தெரியப்படுத்தியிருக்கிறார். அதன்பின் இந்த அறிக்கை சரிதானென்று உறுதி செய்யப்பட்டது.

அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டதுபோல் ஏர்வாடி மனநலக் காப்பகங்களிலுள்ள பெண்கள் பாலியல் வன்முறைக்கும் ஆளாகின்றனர் என்ற செய்திதான் நெஞ்சை ஆணிவைத்து அறைந்த உணர்வைத் தருகிறது. அதுவும் இது சாதாரணமானதுதான் என்ற தொனியும் காப்பக உரிமையாளர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த மனநோயாளிகளை உருவாக்குவதில் இச்சமூக அவலங்கள்தான் முக்கியகாரணம் என்பதில் மறுப்பேதுமில்லை. குடும்ப பிரச்சனைகள், பொருளாதார பிரச்சனைகள், காதல் தோல்வி போன்றவைதான் பெரும்பாலானவர்களை மனநோயாளியாக்குகின்றது.

மேலும் இவர்கள் மனிதப் பிறவியாகவே, சகமக்களால் உணரப்படாதவர்களாக ஆக்கப்பட்டதற்கும் இந்த மனநலக்காப்பகங்களின் செயல்பாடும், சமூக போக்கும்தான், முறையான லைசென்சும், அதற்குரிய விதிகளையும் தீவிரமாக கடைபிடிக்கச் சொல்லி அரசு வற்புறுத்தியிருந்தால் இத்தகைய கொடுமைகளை நாம் சந்தித்திருக்கவேண்டாம். அதோடு மனநோயாளிகள் எப்படி நடத்தப்படவேண்டும் என்ற விதிமுறைகள், அவர்களுடைய உறவுகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தால் கூட இத்தகைய விபரீதங்களை தவிர்த்திருக்கலாம்.

மனநோயாளிகள் என்பவர்கள் நம் சினிமாக்களில் காட்டப்படுவதுபோல் நம்மை சிரிக்க வைப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு பின்னால் இருக்கும் துயரங்களை பொது மக்களுக்கும் தெரிவிப்பது நமது கடமை.

முகைதீன் பாதுஷா சொன்னபடி 'மனநலக்காப்பகம்' ஆரம்பித்தால் நல்ல காசு சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் அவருக்கு உருவானதற்குக் காரணமே, அவர் இதற்குமுன் வாட்ச்மேனாக வேலைபார்த்த மனநலக்காப்பகங்களைப் பார்த்துதான். ஆளுக்கு 500லிருந்து 1500 வரை வசூலிக்கப்படும் பணம் அதற்குண்டான உணவு, மருத்துவம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றதா என்பது மிகப்பெரிய கேள்வியாக இருக்கின்றது. மனநலக்காப்பகங்கள் ஒழுங்காக பராமரிக்கப்பட்டாலே போதும். இத்தகைய கொடிய விபரீதங்களை நாம் தடுக்கலாம்.

**கௌசல்யா**



படிப்பகம்

www.padippakam.com

## ஏர்வாடி ! – பொன்–செல்வ கணபதி

கண்டறியப்பட்டவர்களோ
உள்ளே!
கண்டறியப்பட்டுவிட்டதால்!

கண்டறியப்படாதவர்களோ
கண்கண்ட பதவிகளில்
பலசில
பட்டங்களோடு!

கண்டறியப்பட்டதால்
இரும்புச் சங்கிலிகள்
கால்களிலும்
கழுத்துகளிலும்.....!

கண்டறியப்படாததால்
கனமான மாலைகள்
கழுத்துகளில்
கால்வரை!

கண்டறியப்பட்டவரின்
பேச்சுகள் கூட

உளறல்கள் என்றே
ஒதுக்கப்படுகின்றன!

கண்டறியப்படாதவரின்
உளறல்கள் கூட
பேச்சுகள் என்றே
பெரிதாகப் பத்திரிகைகளில்!

அவர்களால் பாதிப்பு
அவர்களுக்கு மட்டுமே!
இவர்களால்......?

(ஏர்வாடியில் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசியல்வாதிகளையும் ஒப்பிட்டு கவிஞர் எழுதியுள்ளார். ஆசிரியர்)

### காத்திருப்பு

ஏழு நாட்கள் கல் உடைத்து
பெற்ற கூலியுடன் வரும்
மனைவிக்காக காத்திருந்தான் –
கணவன்
அடித்து பிடுங்குவதற்கு

சம்பளக் கவருடன் வரும்
டைப்பிஸ்ட் கீதாவுக்காக
காத்திருந்தான் கணவன்–ஸ்கூட்டரில்
ஆயிரம் செலவுகளுடன்

– ஜீவாலாமுகி

### வேதனையுடன் மக்கள்

சட்ட சபையில் சூடான விவாதம்
வந்தது கிருஷ்ணா நீரா இல்லையா?
சத்துணவில் கலந்தது
புண்ணாக்கா?
மேம்பாலம் கட்டியதில் மா ஊழலா?
ஆளுனர் மாறுதல் அவசியமா?
அரிசியில் புழு
யார் ஆட்சியில்?
வேதனையுடன் மக்கள் தெருவினில்

–ஜீவாலாமுகி

அம்னிஸ்டியின் அறிக்கை படி, இந்தியாவில் 40% திருமணமானப் பெண்கள் சரியாக சமைக்கவில்லை, பாத்திரங்களை சுத்தம் செய்யவில்லை, போன்ற பல்வேறு காரணங்களால் கணவனால் அடிக்கப்படுவதும், உதைக்கப்படுவதும், பாலியல் ரீதியாக கொச்சைப்படுத்தப்படுவதுமான கொடுமைகளுக்கு இரையாகி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆயிஷா



(ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியர் நடராஜன் எழுதிய முன்னுரை)

இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலையும் இவ்வரிசையில் வர இருக்கும் இன்னபிற பன்னிரண்டு நூல்களையும் தமிழில் எழுதத் தூண்டியது ஆயிஷாதான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் என் ஆயிஷாவைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்தப் புத்தகமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள்தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது? இதை எழுதுக் கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப்போகுமாறு கண்ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய ஒரு தேர்ந்த விஞ்ஞானவாதிக்கும் ஆயிஷாவின் கதையை எழுதிக்கொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும்போது மட்டும் இப்படி குழந்தை மாதிரி, துக்கம் கொப்பளிக்க அழநேர்கிறது எனக்கு.

எனக்கு முதன் முதலில் தெரியவந்த ஆயிஷாவுக்கு 15 வயது. நான் அறிவியல் ஆசிரியையாக பணியாற்றிய ஒரு கிறிஸ்துவப் பள்ளியில் பத்தாம் வகுப்பு – பி பிரிவில் ஐம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி. அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள யுவதிகளில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்கு சற்றேறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப்போயிருந்தது. நாங்கள் எட்டுபேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதின் மூலம் இந்தச் சுழல் வாழ்விலிருந்து தப்புவோர், அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியோர் – தங்கள் திருமணத்திற்காக காத்திருக்கத் தொடங்கும் அப்பணியிடத்தில் சற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப் போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத் தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானாள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியையும் இல்லை. வருகைப் பதிவேட்டை சரி செய்யவும் ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாய்ப்பு இல்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன் முதலில் அவளை அறிய நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன். எனக்கு சிலிர்க்கிறது. பல ஆண்டுகளாக ஒரு வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப்போயிருந்தேன். சில வேளைகளில் சில பாடங்களை நடத்தினோமா என்ற ஞாபகமே இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன். இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரியதாக மாறிவிட்டது? காலையில் எழுந்து பல் துலக்குவதை உற்சாகத்தோடவா செய்கிறோம்? எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட் ! இங்கே அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி. அதே செல் பிரிதல், புதிதாகத் தெரிந்து கொள்ளும் ஆர்வமற்று ஓர் இயந்திரமாய் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்து பாடம் எப்படி ஒரு காந்தமாக உள்ளதென விளக்கிக் கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவக் காந்தம். அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. காந்தத்தின் வட நோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத் தனத்துடன் யாவரையும் உறங்க வைத்துவிடும் என் தொனியில் கரும் பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக் கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

மிஸ், என்றொரு குரல். கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் என்ன வாந்தி வருதா? என்றேன். வகுப்பே கொல்லெனச் சிரித்தது. சரியான முட்டாள் நான். எப்பேர்ப்பட்டவள்? என் ஆயிஷாவைப் போய் எப்படி சொல்லி இருக்கிறேன்.

இல்ல மிஸ்... சந்தேகம்

இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது. சட்டென முகம் சுருக்கி, சுள்ளென எரிந்துவிழும் குரலில் என்ன? என்றேன். கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப்பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காண முடிந்தது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்கார வைக்கும் முயற்சி, பின் மறுபடி என்ன? என்றேன்.

மிஸ்... அந்தக் காந்தத்தை ரெண்டா வெட்டினா என்ன ஆகும் மிஸ்?

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்துவிட்ட இந்த ஆறு ஆண்டுகளில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தைப்பற்றி யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்று பொறி தட்டியது.

ரெண்டு காந்தம் கிடைக்கும் சரி, பதில் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக் கடினப்பட்டு புன்னகைக்க முயற்சி செய்தாள்.

அந்தக் காந்தத்தை வெட்டிகிட்டே போனா? உதாரணமாக நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா...?



படிப்பகம்

www.padippakam.com

ரொம்ப சிம்பிள்மா... முடிவுறா எண்ணிக்கையில் காந்தம் கிடைக்கும்...

மீண்டும் நிசப்தம். லேசாக வியர்க்கிறது அவளுக்கு. வகுப்பு உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே உட்காரு என்றேன். பின் நடந்து கொண்டிருந்தேன். ஏதேதோ பாவனையாகப் பேசிக்கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும்வரை அலைந்துவிட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

அடுத்த வகுப்பறையை தாண்டியிருக்க மாட்டேன். கூடவே வந்தது நிழல்.. மிஸ் ப்ளீஸ்.. ஒரே ஒரு நிமிஷம் மிஸ்... அப்படி சொல்லும்போது அவள் முகத்தை பார்க்க வேண்டும் நீங்கள்! அதற்கு மேலும் புறக்கணிக்க முடியவே முடியாது.

என்ன சொல்லு?

காந்தம் பத்திதான்... மிஸ்

சொல்லும்மா... டயம் ஆச்சில்ல?

முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர்கோட்டில் வெச்சா.... எதிர் துருவங்களைக் கவரும் அதன் இயல்பு என்ன ஆகும்?

....

ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்தின் தெற்கை இழுக்கும். ஆனால் இழுபடும் காந்தத்தின் வடக்கே அடுத்துள்ள காந்தம் ஏற்கெனவே இழுத்து கிட்டிருக்கும் இல்லையா மிஸ்..?

ஆமா அதுக்கென்னன்ற?

என் சந்தேகமே அங்கதான் இருக்கு. எல்லா காந்தங்களின் கவர்திறனும் ஒன்றெனக் கொண்டால் அவை ஒட்டிக்கொள்ள வாய்ப்பே இல்லையே... எப்புறமும் நகராமல் அப்படியே தான் இருக்கும்?

ஏன் நாம இந்த பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்க் கோட்டில் வைத்தது போல் அமைக்கப்பட்டதா வெச்சிக்கக் கூடாது? அந்தக் கோணத்தில் பூமிங்கற காந்தத்த ஆராயலாம் இல்லையா?

பதிமூன்று வருட பள்ளி வாழ்க்கை, பின் மூன்றாண்டு இயற்பியல் – பல்கலைக்கழகத்தில்.... இப்படியொரு கேள்வியை நான் கேட்டுக்கொண்டதாக நினைவில்லை. எங்கோ படித்ததாக ஞாபகம் என்றேன்.. ஏதாவது சொல்ல வேண்டுமே!

"தி ட்ரூத் ஆஃப் மேக்னட்ஸ் வெட்ரோட ஸ்டூடண்ட் கிங்லீங் எழுதியது.... அருமையா இருக்கு.... படிக்கிறீங்களா மிஸ்...".

இந்த புக்கெல்லாம்... நீ படிக்கிறாயா? அவ்வளவுதான் – என் ஆயிஷா கிடைத்துவிட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்றுவரை மீள முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

அறை வாங்கியவளைப் போல புத்தகத்தை வாங்கிக் கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.

இப்போதும் சொல்கிறேன்.. அந்த நிமிடத்திலேயே ஆயிஷா என்னை முழுதாக வென்றுவிட்டாள். எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதன்பின் அவளை நான் வெறுத்ததே இல்லை. ஒரு செக்குமாட்டிற்கு இதைவிட அமர்க்களமாய் யார்தான் சூடு போட முடியும்?

இரவில் எனது விடுதி அறையில் புத்தகத்தை புரட்டியபோது மேலும் பல அதிர்ச்சிகள். முதலில் ஒரு மாவட்ட மைய நூலகத்தின் முத்திரை பெற்றிருந்தது. பின் அதில் ஆயிஷா அடிக்கோடிட்டிருந்த முறை ஆங்காங்கே காணப்பட்ட அடிக்குறிப்புகள் எல்லாமே அவளைக் குறித்த எனது எண்ணத்திற்கு மேலும் மேலும் ஆச்சரியக் குறிகளை கூட்டிக் கொண்டிருந்தன. ஆயிஷா ஒரு குழந்தை இல்லை. அவள் யாரோ, மனுஷி கூட இல்லை. வேறு ஏதோ பிறவி கடவுளே. நான் ஒரு நிமிடம் கூட தூங்கவில்லை.

விடுதியில் காலை வேளையில் அவளது வகுப்புப் பெண்களை அழைத்துப் பேசத் துடித்தேன். அவளைப்பற்றி அறிய வேண்டும். இத்தனை நாட்கள் அவளை அறியாது போனது ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது. புத்தகமோ என் அறையே கனத்துப் போகும்படி என்னை திடுக்கிட வைத்துக்கொண்டிருந்தது. வேலைகள் ஓடவில்லை. இத்தனைக்கும் எல்லாவற்றையும் படிக்கவில்லை. அப்பெண் அடிக்கோடிட்டிருந்த வரிகளையும் அவளது அடிக்குறிப்புகளையுமே படித்து விழி பிதுங்கிப் போயிருந்தேன்.

முதல் பாட வேளையில் வகுப்பேதும் இன்றி ஆசிரியர் ஓய்வறையில் அமர்ந்து இருந்தேன். கையில் புத்தகம் ஓய்வறையில் ஆசிரியைகள் புதிய புடவை டிசைன்களைப் பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும் ரெஜினா மிஸ்ஸூக்கும் இதேதான் வேலை. இல்லையென்றால் நடிகைகளின் வித்தியாசங்கள். ஒருநாள் புருவம். மறுநாள் மச்சம், இப்படிப் பேசிப் பேசிக் களைத்து பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள். ஆரம்பத்தில் இது எரிச்சலூட்டுவதாக இருந்தது. பிறகு மரத்துப் போனது. இப்போது புதியவளாகி இருந்தேன். அவர்களைப் பார்த்து எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகியிருந்தது.

திடீரென்று மாணவியர் பக்கம் பேச்சு சென்றது. ரெஜினா ஒவ்வொரு பெண்ணாகக் கேலி செய்து கொண்டிருந்தாள். அவளது கொண்டை குலுங்க அவள் அதைச் செய்தாள். குதிரை மூஞ்சி, நரி வால், எலி வால் என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பெயர் வைத்திருந்தாள். அவளது அருவருப்பான வேடிக்கைகளை சரோஜினி ரசித்துக்கொண்டிருந்தாள். ரெஜி... ரெஜிமா.. கொன்னுட்டடி என்ற ஆராதனைகள் வேறு.

பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. நானும் அவர்களது கூட்டத்தில் ஒருத்தியா? எல்லாமே முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள். அவற்றிற்கு



படிப்பகம்

www.padippakam.com

நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள். வகுப்பறையில் ஆசிரியர்கள் ஓய்வெடுக்கிறார்கள். வெறும் மனப்பாடம் செய்யும் இயந்திரமாய் (அதுவும் முக்கிய கேள்விகளுக்கு விடைகளை மட்டும்) மாணவர்கள் உருமாற்றம் அடைந்துவிட்டனர்.

எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு, வரிசை எண், தேர்வு எண் பெற்றெடுக்கும் மதிப்பெண்கள் எங்கும் எண்கள். எண்களே பள்ளிகளை ஆள்கின்றன. எல்லா ஆசிரியைகளுமே ஏதாவது ஒரு வகையில் மாணவரின் அறிவை அவமானப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டேன். அவர்களில் ஒருத்தியா நான்? என் மீதே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. ஒரு பெண், அறிவார்த்தமான ஒரே ஒரு கேள்வியால் என்னை எப்படி யோசிக்க வைத்துவிட்டாள்?

ஒரு கேஸ் இன்னிக்கு பிடிபட்டுது... இத கேட்டியோ... என்று அங்கலாய்த்தபடி என்னிடம் வந்தாள் சுகுணா மிஸ். மேல்நிலைக்கு கணக்கு நடத்துபவள். விடுதிக் காப்பாளர் யுவதிகளில் ஒருத்தி. எந்த உற்சாகமும் இன்றி என்ன? என்றேன்.

வினோதமான கேஸ்.... லெவன்த் வீட்டுக் கணக்கு திருத்திக்கிட்டிருந்தப்போ கஷ்டப்பட்டு பிடிச்சேன். பாதிப் பேர் நோட்ல ஒரே கையெழுத்து... அதுவும் ஒரு லாஜிக்சம். முதல்ல காப்பினு நெனச்சேன். அப்புறம் ஒருத்திய பிடிச்சி செமத்தியா குடுத்தேன். உண்மையை கொட்டிட்டா

கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.. அவள் என்னைக் காத்திருக்க வைத்தாள். நான் திடுக்கிட வேண்டுமென விரும்புபவள் போலிருந்தாள். ம் சொல்லு என்றேன்.

நம்பமாட்ட... ஒரு டென்த் ஸ்டாண்டர்டு படிக்கிற பெண் லெவன்த்துக்கு வீட்டுக்கணக்கு போட்டுத் தந்திருக்கு...

டென்த்தா? எழுந்து நின்றிருந்தேன்.

ஆமாம்... கஷ்டப்பட்டு கண்டுபிடிச்சேன். நேரா... ஸிஸ்டர்ட்ட போயிட்டேன்... எனக்கு ஊர்ஜிதமாகிவிட்டது போலானது என்னா பண்ணினாங்க அந்தப் பெண்ணை,....?

அது ஒரு ஆயி அப்பன் இல்லாத கேஸ்

ஆர்பன்ஸ் ஹோமா?

சித்தி வீடே என்னமோ.... கார்டியன் வரச் சொல்லியிருக்காங்க... மோஸ்ட்லி டி.சி.யாகத்தான் இருக்கும்.

நான் எப்படித் தவித்தேன் என்பதை என்னால் இங்கு எழுத முடியாது. பிரின்சிபல் அறைக்கும் ஓய்வறைக்கும் இருப்புக் கொள்ளாமல் நான் அலைந்தேன். பதினொன்றாம் வகுப்பு மாணவியர்க்கு ஒரு டென்த் மாணவி வீட்டுக் கணக்குச்சொல்லித் தருகிறாள் என்றால் அவள் என்ன நம்ப முடியாத பிறவி? இங்கு வந்து ஏன் பிறந்து தொலைத்தாள்? அம்மா, அப்பா இல்லாதவளாமே.... கடவுளே எங்கள் குழந்தைகளை ஆசிரியர்களிடமிருந்து காப்பாற்றும்.

அவளது வகுப்பிற்கு நான் போன நேரத்தில் அவளது இடம் காலியாக இருந்தது. விசாரித்தேன். செம அடி மிஸ் என்று கலங்க அடித்தார்கள். ஏதோ ஆகிப்



படிப்பகம்

www.padippakam.com

போயிருந்தேன்.. எதுவும் நடத்தப் பிடிக்காதவளாய் இருக்கையில் அமரப் போனேன்.

மே அய் கம் இன்.... மிஸ் ஆயிஷா நின்றிருந்தாள். கலைத் தெரியப்பட்ட கனவுபோல், வெள்ளைப் படுதாவுடன் இரண்டு இசுலாமிய பெண்கள் உடன் நின்றிருந்தனர். ஒருத்தி எனக்கு முகமன் செய்தாள்.

நான் ஆயிஷாவோட சித்தி

வாங்க

எப்படி படுத்தறா பார்த்தீங்களா .... இவ என்னோட அக்கா பொண்ணு. இவப் பொறந்த நேரமே சரியில்லை. இந்தச் சனியன் வேணும்னு யார் அழுதா... தருதல மக...

என் கண் முன்னால் ஆயிஷாவை அடிக்க முயன்றாள்.

கொஞ்சம் பாத்துக்கங்க.... புத்தி சொல்லுங்க.... என் புருஷன் கூட இங்க இல்ல.... துபாயில இருக்காரு.... தனியா அவஸ்தைப்படறேன்... இது இப்படி இருக்கு. படிப்ப நிறுத்திடலாம்னா.... சரி இவ்வளவு வருசம் படிச்சது படிச்சாச்சு. ஒரு எஸ்.எஸ்.எல்.சி முடிச்சிடட்டுமேனு பாக்கேன்...

அன்று வகுப்பிலிருந்து கிளம்பும்போது சொன்னேன்

ஆயிஷா... ஈவினிங் ஹாஸ்டல்ல வந்து என்னப்பாரு....

எஸ்... மிஸ்...

ஆயிஷாவோடு நான் மிக நல்ல உறவு வைத்துக்கொண்டேன் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஆரம்பத்தில் அவளது வருகை என் சக ஆசிரியைகளுக்கு எரிச்சலைக் கொடுத்தது உண்மைமான். ஆனால் காலப்போக்கில் சரியாகிப் போனது. அவளிடம் இருந்து எக்கச்சக்கமான கேள்விகள் வந்து கொண்டே இருந்தன. ஆயிஷாவுக்கு மட்டுமென்ன? யாரிடமாவது கேள்விகளைக் கொட்டித் தீர்க்க மாட்டோமா என்று ஏங்கிக் கிடந்தவன்தானே... நான் கிடைத்ததும் ஒட்டிக்கொண்டுவிட்டாள். தினமும் மாலை நான்கு மணியிலிருந்து இருட்டும் வரையில் விடுதி அறையில் இருக்கத் தொடங்கினாள்.

ஆயிஷாவிடம் எனக்கு பிடித்தமான இரண்டு அம்சங்கள் இருந்தன. ஒன்று அவளது வேகம். அது அசாதாரணமானது. பத்து பன்னிரண்டு பக்கங்கள் படுவேகமாய் படித்துவிடுவாள். இரண்டாவது கேள்வி கேட்கும் அவளது அறிவுப்பசி. புரியாததை புரியும்வரை விடமாட்டாள். நான் அவளோடு பழகிய குறுகிய காலத்திற்குள் இந்தப் புத்தகத்தில் சேர்த்திருக்கும் அத்தனை கேள்விகளையும் அவளைக் கேட்க வைத்தது அவளது அறிவுப் பசிதான்.

வெப்பவியல் நடத்தியபோது அவள் கேட்ட கேள்வி அற்புதமானது. மிஸ்... மெழுகுவர்த்தி எரியுது. ஒரு கேஸ் அடுப்பும் எரியுது... இரண்டுமே நெருப்புதான். மெழுகு தீபத்தில் ஒளி அதிகமாயும் வெப்பம் கம்மியாகவும் இருக்கு. ஆனா அடுப்புல



படிப்பகம்

www.padippakam.com

ஒளி கம்மியாவும் வெப்பம் அதிகமாயும் இருக்குதே ஏன் மிஸ்? நான் கேட்டுக்கொண்டேன். இந்தக் கேள்வி கேட்கும் மாபெரும் வித்தையே அவள் எங்கேயிருந்து கற்றாள்? அது அவளது உதிரத்தில் உள்ளதா? வகுப்பறை என்றல்ல... ஒரு நாள் நான் எனது ஆடைகளை துவைத்துக்கொண்டிருக்கும்போது கேட்டாள். துணி துவைக்கிற சோப் அழுக்கை அகற்றுவதற்கும், குளியல் சோப் அழுக்கை அகற்றுவதற்கும் இடையிலான வித்தியாசம் என்ன? கடவுளே இந்தப் பெண்.... கேள்விகளால் இந்தப் பிரபஞ்சத்தை உலுக்கவே பிறந்திருக்கின்றாள்.

ஒரு நாள் 'The most dangerous man in america' என்ற பெஞ்சமின் பிராங்க்ளினின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தைக் கொண்டு வந்தாள். என்னையும் அதிசயிக்கத் தக்க வகையில் ஒரு புத்தகத் புழுவாக மாற்றிக் கொண்டிருந்தாள். மின்னலில் மின்சாரம் உள்ளதை நிரூபித்த பிராங்க்ளினின் பட்டம் ஒரு பட்டு கைகுட்டையால் செய்யப்பட்டது மிஸ்... என்றாள். எனக்கு அதுவரை தெரியாது. ஒரு கேள்வியை எழுப்பிக்கொள்வது. பிறகு அதற்கொருவிடை தெரியும்வரை ஓயாது தேடுதல் என்கிற ஒரு நேர்ந்த விஞ்ஞானியின் தகுதி ஆயிஷாவிடம் இயல்பிலேயே இருந்தது.

மிஸ்.... நியூட்டன் அறிவியல் சோதனைகள் நடத்த ஆரம்பிச்சப்போ அவருக்கு வயது பன்னிரண்டு. பிராங்க்ளின் தன் முதல் சோதனையை 40 வயசுலதான் செய்திருக்காரு வயதா பிரச்சினை... ரெண்டு பேரும் விஞ்ஞானிகள்தான்...

"..........".

"மிஸ் இந்தப் புத்தகத்துல சில பக்கங்கள் நல்லா புரியது. சிலது புரிய மாட்டேங்குது"

"போகப்போகப் புரியும். அது அதுக்கு ஒரு வயது வேண்டாமா..."

"என்ன மிஸ்... நீங்க... எனக்கு இங்கிலீஷ்தான் பிரச்சனை...."

"அதுவும் ஒரு பிரச்சனைதான்"

"ரொம்ப கஷ்டமாயிருக்கு மிஸ். நம் மொழியிலேயே வரனும்"

"யாா் எழுதறாங்க.... சொல்லு. "

"நீங்க எழுதலாமே மிஸ் "

"இப்படி புத்தகங்களை திருடிட்டு வர்றியே ... மாட்டிக்கிட்டா?"

"நான்தான் படிச்சிட்டு எடுத்த இடத்திலேயே வெச்சிடறேனே..."

"தப்பும்மா...."

"சொல்லுங்க மிஸ்"

"என்ன சொல்லணும்?"

"நீங்க ஏன் தமிழ்ல இதையெல்லாம் எழுதக்கூடாது...?"

"பாக்கலாம்... அதுக்கெல்லாம் நிறைய விசயம் தெரியணும்?"



படிப்பகம்

www.padippakam.com

பிறகு வழக்கமான வேகத்தோடு கேட்டாள்.

மிஸ்... மின்னலிலிருந்து மண்ணை மின்சாரம் தாக்கும் இல்லையா? மரம் கூட விழுவதுண்டு. கம்பியிலுள்ள மின்சாரத்திற்கும் அதுக்கும் என்ன வித்தியாசம்? எப்படி மின்சாரம் பரவுது?

என் ஆயிஷா அப்படிப்பட்டவளாக இருந்தாள். என் பழைய ரெக்சின் பையில் அவளது சின்ன ஆய்வுக்கூட பொருட்கள் இருந்தன. ஒரு லென்சுக் கண்ணாடி, வட்ட வடிவ காந்தம்.... மருத்துவரின் ஊசி சிரிஞ்சு ஒன்று மற்றும் ஒரு பழுதடைந்த டிரான்சிஸ்டர் வானொலி. அதனை சரி செய்யும் முயற்சியிலேயே பல விடுமுறை நாட்கள் கழிந்தன.

நானே நிறைய மாறிக் கொண்டிருந்தேன். எவ்வளவு மோசமானவளாக இருந்திருக்கிறேன்? எனது சொந்தத் துறை மீதே எவ்வித அக்கறையும் இல்லாமல் சொரணையற்ற பிண்டமாக ஆறு ஆண்டுகள் வெறுமனே தள்ளியிருக்கிறேன்.

ஆயிஷாவின் உறவில்தான் நான் உணர ஆரம்பித்தேன். எவ்வளவு தூரம் விஞ்ஞானமற்ற முறையில் நாம் நம் குழந்தைகளுக்கு விஞ்ஞானம் போதிக்கிறோம் என்று நாம் எங்கே குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட விசயத்தை உணர்ந்து கேள்வி கேட்க அவகாசம் தருகிறோம்? அவர்கள் கேட்கத் தொடங்கும் முன்னரே நாமாக முன் தயாரிக்கப்பட்ட கேள்விகளால் அவர்களை மூழ்கடித்துவிடுகிறோம். அறிவும் வளருவதில்லை. பள்ளியில் ஆசிரியர்கள் அதிகம் சொல்வது எதை? கையகட்டு.... வாயை பொத்து...

விரைவில் புரிந்து கொண்டேன் என் ஆயிஷாவுக்கு நாலுபுறமிருந்தும் பிரச்சனைகள் முளைத்தன. ஆனால் பைத்தியக்காரி. நான் உணரத் தலைப்படவில்லை அவளை. அவளின் அறிவை. எது எந்தத் திசையில் செலுத்தும் என்று. ஒரு நாள் சட்டென்று கண்ணில் பட்டது அது. ஆயிஷாவின் பின்காலில் பட்டை பட்டையாக வீக்கம். தடித்துப் போகுமளவிற்கு அடி வாங்கியிருந்தாள். இப்போது அவள் என்னிடம் மிகவும் நெருங்கியிருந்தாள். அவளைத் தொடாமல் என்னால் பேசவே முடியாது. அவள் மீது அவ்வளவு அன்பூறும்படி அவள் செய்திருந்தாள். அருகில் அழைத்து விசாரித்தேன்.

கெமிஸ்ட்ரி மிஸ் அடிச்சாங்க... என்றாள்.

ஏன்... ஏன் ஆயிஷா?

பேப்பர் வந்தது. மார்க் சரியா போடல.... கேட்டேன்... சொந்த சரக்குக்கெல்லாம் மார்க் கிடையாதாம்.. நோட்ஸ்ல இருக்கிறத அப்படியே எழுதணுமாம்... டென்த்துன்னு மிரட்டுறாங்க. மிஸ்... நோட்ஸ்லே தப்பாயிருந்தா என்ன பண்றதுனுட்டு கேட்டேன்... பேச முடியவில்லை அவளால், காண சகிக்கவில்லை. அழும்போது அவள் குழந்தையாக இருக்கிறாள்.

முன்பு ஒருமுறை சரோஜினியிடம் வாங்கிக் கொண்டு வந்தாள். இதே நோட்ஸ்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினை.... கடவுளே... அவரவர் அறிவை பயன்படுத்த அனுமதியுங்களேன். எப்பேர்பட்ட பெண். அவளை அடிப்பது என்றால் எப்படி மனசு வருகிறதோ... ராட்சசிகள்...

எல்லா ஆசிரியைகளுமே வீட்டில் தனியாக டியூசன் நடத்தி வந்தனர். பணம், எல்லாம் அது படுத்தும்பாடு போட்டா போட்டி சண்டை வீட்டிற்கு படிக்க வருவோர்க்காக விவேச சலுவை, சட்டங்கள். வகுப்பில் ராஜ மரியாதை.... வினாத் தாள்களை முன்பே அறியும் உரிமை. எவ்வளவு குமட்ட வைப்பது அது.... வெட்கமில்லாமல் இதை அவர்கள் செய்தே வருகிறார்கள். வருமானவரியில் சேராத வருமானம் யார்தான் விடுவார்கள்?

ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் பழி வாங்கப்பட்டாள். வகுப்பிலும் கேள்விகள் கேட்டு குழப்பி விடுபவளாக இருக்கிறாள் அல்லவா. தொழிலைக் கடினமாக ஆக்குபவளை யார்தான் விரும்புவார்கள். விரைவில் எனது போராளி தினமும் உதை வாங்கிவரத் தொடங்கினாள்.

வரலாற்றுப் பாட வேளையில் ஜெர்சி மிஸ் என்ன செய்தாள்?

அசோகரை புத்த மதத்திற்கு மாற்றியது யார் மிஸ்?

புத்த பிட்சு ஒருத்தர்?

இல்ல. அவர் பெயர்?

....

அவரது பெயர் உபகுப்தர் மிஸ்...

தெரிஞ்சு வெச்சுகிட்டு டெஸ்ட் பண்றியா.... வாடி இங்க

ஒரு காலில் நிற்கவைத்து உதைத்திருக்கிறாள். இப்படி ஆயிஷா முன் எல்லா ஆசிரியைகளுமே தனது பிரம்புப் பிரயத்தனத்தால் அறிவை நிலை நாட்டத் தொடங்கிவிட்டார்கள். டீச்சர் அடிச்சா வலிக்காம இருக்க ஏதாவது மருந்து இருக்கா? என்று கேட்கிறாள் ஆயிஷா.

அடி.... அசட்டுப் பெண்ணே... என்று கட்டிக்கொண்ட என்னால் அப்போது எந்தப் புதிரையும் உணர முடியவில்லை. எவ்வளவு பெரிய முட்டாளாக இருந்துவிட்டேன் , நான்.

சம்பவத்திற்கு முதல் நாள் வகுப்பில் சர்ஹம்ரி டேவியைப் பற்றி சுருக்கமாய் சிலவற்றைச் சொன்னேன். அறுவை சிகிச்சையின் போது உடலை மரத்துப் போக வைக்கிற நைட்ரஸ் ஆக்ஸைடு வாயுவை அவர் கண்டுபிடித்தது குறித்து பாடம் நடத்தினேன்.

நைட்ரஸ் ஆக்சைடு தண்ணீரில் கரையுமா.... மிஸ்..

தண்ணீரில் மட்டுமில்ல. அது எத்தனாலிலும் சல்பியூரிக் அமிலத்திலும் கூட கரையும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படித்தான் நான் மோசம் போனது.. எப்படி மறப்பது அதை. அன்று பள்ளியில் குழந்தைகள் தினம். மாவட்ட ஆட்சித் தலைவர் வருவதாக இருந்தது. மதியம் விழா இருந்தமையால் காலையில் பள்ளி. விடுமுறை நாட்களில் வீட்டில் எவ்வளவுதான் வேலைகள் என்றாலும் பத்து பதினொரு மணிக்கும் என் ஆயிஷா ஓடோடி வந்துவிடுவாள். அன்றைக்கு என்று ஆளைக் காணவில்லை.

எனது சொந்த வேலைகளில் மும்முரமாக இருந்தபோது உச்சி. வெயிலில் ஒரு மாணவி வந்து அழைத்தாள். ஆயிஷா அனுப்பியதாகவும் வேதியியல் ஆய்வுக் கூடத்திற்கு பின்புறம் அவள் இருப்பதாகவும் கூறினாள்.

ஏன் அவ இங்க வரவேண்டியதுதானே

தெரியல மிஸ்

அவளை அனுப்பிவிட்டு கிளம்பினேன். மனசுக்குள் ஏதோ எங்கோ பிசகிப் போனதை உணர்ந்தேன். கடவுளே... இதை எழுதும் தருணத்தில் எனக்கு எப்படி உடல் நடுங்குகிறது.

லேசான களைப்பில் இருப்பவளைப் போலிருந்தாள் ஆயிஷா.

என்ன... என்ன எக்ஸ்பரிமண்ட்?

இந்தாங்க ஸ்கேல்.... என்னை அடியுங்க பார்ப்போம்

இன்னிக்கு.... எக்ஸ்பிரிமெண்ட் சக்சஸ் மிஸ்...

ஏன் ஆயிஷா என்ன சொல்றே நீ....

மருந்து மிஸ்.... மரத்துப்போற மருந்து.... இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ்... எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்...

ஆயிஷா... உனக்கென்ன பயித்தியமா?

லாபிலிருந்த நைட்ரஸ் எத்தனால் கரைசல் கிடச்சது மிஸ்.. முதல்ல இந்த தவளைக்கு ஊசிப் போட்டேன். இரண்டு மணி நேரம் மல்லாக்கப் போட்டலும் உணர்ச்சி இல்ல... அப்போ மரத்துப் போச்சினு அர்த்தம்

...

அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுக்கிட்டேன். எப்படி ஐடியா...

ஏம்மா....' இப்படியெல்லம் பண்ற....

பாருங்க இந்தத் தவளைதான்

நான் பார்த்த இடத்தில் இருந்த வாளித் தண்ணீரில் ஒரு தவளை தலைகீழாய் மிதந்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஆயிஷா...... நோ....

அய்யய்யோ..... தவளை செத்துப் போச்சு மிஸ்...

கடவுளே! அதற்கு மேல் எழுத என்ன இருக்கிறது? வேதியியல் ஆய்வுக் கூடத்தின் பின்னால் ஆயிஷா விழுந்து கிடந்தாள். ஒரு மாலை மாதிரி விழுந்து கிடந்தாள். சின்னக் கூட்டம் கூடியது. பியூன் கோவிந்தன் ஆட்டோ கொண்டுவர ஓடினான். சிஸ்டருக்குச் சொல்லப்பட்டது அவளை என் உயிருக்கு உயிரான ஆயிஷாவை சுமந்து கொண்டு நான் சாலைக்கு ஓடினேன். என் கண்ணான அவளை எப்படியாவது பிழைக்க வைத்துவிட வேண்டுமெனத் தவித்தேன்.

ஆனால் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்குப் போவதற்குள் என் ஆயிஷா பிரிந்துவிட்டாள்... எப்பேர்பட்ட ஆயிஷா. நான் தாங்கிக் கொள்ள முடியாதவளாய் குழந்தை மாதிரி அவள் மீது புரண்டு கதறி அழுதேன். இனி என்ன உங்களுக்கு திருப்திதானே மிருகங்களே.... என் ஆயிஷாவை ஒப்பற்ற அந்த அறிவுக் கொழுந்தை கொன்று தீர்த்துவிட்டீர்கள். போங்கள். இனி உங்கள் வகுப்புகள் எளிமையாளவை... அறிவுக்கு அங்கு வேலை இல்லை.

ஆயிஷா என் கண்ணே.... என் கண்களை திறந்துவிட்டுவிட்டு ஏன் அவ்வளவு சீக்கிரம் என்னைவிட்டு ஓடிப்போனாய் பார்.... உனக்காக நீ கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் பதில்களைத் தேடித்தேடி எழுதி வைத்திருக்கிறேன். நீ சொன்னது போல தமிழில் எழுதியிருக்கிறேன்.

உன் மாதிரி எத்தனை ஆயிஷாக்களை நாங்கள் இழந்திருப்போம். நீ இறந்து போனாய். வயசுக்கு வந்த நாளோடு பள்ளிக்கூடம் விட்டு ஓடியவர்கள். எங்கேயோ ஒரு ஊரில் யாரோ ஒருவனுக்காகத் துவைத்து, சமைத்து பிள்ளை பெற்றுப் போடுபவர்கள். ஆணின் பாலியல் பசிக்காக தன்னை விற்பவர்கள், முப்பது ரூபாய் சம்பளத்திற்காக வீடு பெருக்கி சாணி மெழுகுபவர்கள். வயல் கூலிகள், கட்டடங்களுக்கு கல் உடைக்கும் பெண்கள்– அவர்களில் எத்தனை ஆயிஷாக்கள் உள்ளனரோ, தன் விஞ்ஞானக் கனவுகளை நாள்தோறும் அடுப்பு நெருப்பில் போட்டு சாம்பலாக்கிவிடும் அந்த நூற்றுக்கணக்கான ஆயிஷாக்களுக்கு இந்தப் புத்தகத்தை கண்ணீரோடு சமர்ப்பிக்கிறேன்.

இந்த விஞ்ஞான நூலை வாசிப்பவர்கள் அதை ஒரு பத்துப் பெண்களுக்காகவது இரவல் கொடுப்பார்களா?

அவர்களில் ஒரு ஆயிஷாவாவது இருப்பாளா? என் பொக்கிஷமே ஆயிஷா.... நீ கேட்ட கேள்விகளிலேயே என்னை மிகவும் பாதித்த ஒரு கேள்வி உண்டு. அதை வாசகர் முன் வைத்து என் முன்னுரையை முடிப்பதே பொருத்தமாக இருக்கும்.

மிஸ்... கரோலின் ஏர்ஷல் போலவோ மேரிகியூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்ற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வர முடியலையே ஏன்?

இக்கேள்விக்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியதில்லை. தங்கள் சொந்த வீடுகளின் இருண்ட சமையலறையில் போய் அவர்கள் அதை தேடட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

44–ம் பக்கத் தொடர்ச்சி......

ஏஜெண்டான ஐ.நா. மூலம் தடுத்து வருகிறது.

லெபனானில் அமெரிக்க இராணுவ உதவியுடன் பல்லாயிரம் பேரை படுகொலை செய்தது இஸ்ரேல் அரசு. அகதி முகாம்களில் இருந்த சாதாரணப் பாலஸ்தீன மக்களைகூட ஈவு இரக்கமின்றி படுகொலை செய்தது. அரபு நாடுகளை ஒடுக்க இஸ்ரேலை பயன்படுத்துகிறது.

இதுமட்டுமின்றி, இப்பகுதியில் பலமான நாடுகளான ஈரானையும், ஈராக்கையும் ஒடுக்க கடுமையாக முயற்சித்து வருகிறது. ஈராக்கில் மட்டும் அமெரிக்கத் தாக்குதலை ஒட்டி ஒரு இலட்சம் பேரும், அமெரிக்கத் தாக்குதலால் ஐந்து இலட்சம் குழந்தைகள் உட்பட பத்து இலட்சம் பேரும் பலியாகியுள்ளனர். இப்பகுதியின் இன்னொரு முஸ்லீம் நாடான லிபியா மீது அமெரிக்கா அப்பட்டமான தாக்குதலை மேற்கொண்டது.

தனது சுரண்டல் நலன்களுக்காகவும் அரசியல் மேலாதிக்கத்தை பாதுகாக்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடத்தி வரும் கொடூர பயங்கரவாத செயல்களின் எதிர்விளைவே அமெரிக்கா மீதான தாக்குதல்கள் என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். தனது கொடூர ராணுவ பலம், நவீன தொலைத் தொடர்பு, பொருளாதார பலத்தை பயன்படுத்தி அராபிய மக்கள்மீது கொடுமைகளை தொடர்ந்து வரும் இவ்வேளையில் இத்தகைய தாக்குதல்கள் ஆச்சரியமானதில்லை.

உலக மக்களின் முதல் எதிரி, பயங்கரவாத அமெரிக்க ஏகாதிபத்தியம் !

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாறு நெடுக உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் இரத்தமும் கண்ணீரும் நிறைந்திருக்கின்றன. ஆப்பிரிக்க அடிமைகளின் இரத்தத்திலும், சிகப்பிந்தியர்களின் படுகொலைகளிலும் உருவான அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக மக்களுக்கு எதிரான எண்ணற்ற கொடூரங்களை இழைத்து வருகிறது.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானில் அணுகுண்டு வீசி ஹிரோஷிமா நாகாசாகியை அழித்தபோது, பல்லாயிரம் மக்களை படுகொலை செய்தது. கொரியாவிலும், கம்பூச்சியாவிலும் அமெரிக்கா ஆக்கிரமிப்பு எண்ணற்ற மக்களை படுகொலை செய்தது. சிலியில் அதிபர் அலண்டேவையும், இன்னும் பல்லாயிரம் பேரை படுகொலை செய்தது அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. இலத்தீன் அமெரிக்காவிலும், இந்தோனேஷியாவிலும், உலகம் முழுவதும் அமெரிக்க எடுபிடி ஆட்சியாளர்கள் பல இலட்சம் பேரை படுகொலை செய்தனர். ஆப்பிரிக்க கண்டத்தில் முந்தைய நிறவெறி தென்னாப்பிரிக்காவின் பயங்கரவாத ஆட்சியை பாதுகாத்தது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இப்படி உலகெங்கும் தேசிய விடுதலை போர்கள், புரட்சிக்கர போராட்டம் மட்டுமின்றி தனக்கு அடங்க மறுக்கும் நாடுகளை ஒடுக்க அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் செய்த, செய்துவரும் படுகொலைகளும், ஆக்கிரமிப்புகளும் கணக்கிலடங்கா.

மேலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகமயமாக்கல், தாராளமயமாக்கலால் கோடிக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவுகளில் தினமும் இறந்து வருகின்றனர். இக்கொடூரத் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தபோது, வாயை மூடிக்கொண்டிருந்த அமெரிக்க அடிவருடிகள் இன்று அமெரிக்கா தாக்கப்பட்டவுடன் "சர்வதேச பயங்கரவாதம்" என்று கொக்கரிக்கின்றனர் !

இத்துணை நாட்களாக, உலகையே ஏய்த்து வந்த அமெரிக்கா, தன்னையே தாக்கிவிட்டனரே என்ற ஆத்திரத்தில், தன்னைத் தாக்கியவரைப் பழிக்கு பழி வாங்க துடிக்கின்றது. தன்னுடைய ஏஜெண்டான ஐ.நா. சபையின் மூலம் அதிவேகமாக இம்முடிவை செயல்படுத்த ஆயுத்தமாயியுள்ளது. இதன் முதல் கட்டமாக, "சர்வதேச தீவிரவாதம் தலைவிரித்தாடுகின்றது, இதை ஒடுக்க உலக நாடுகள்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்று சேர வேண்டும்" என்று கூப்பாடு போடுகின்றது. அதன் அடுத்த கட்டமாக சிறுபான்மை முஸ்லீம் மக்கள் மீதான (முஸ்லீம் பழமைவாத கருத்துக்களை பின்பற்றுவராயிருப்பினும்) அமெரிக்காவின் பல்லாண்டுகால ஒடுக்குமுறையை எதிர்த்து போர் தொடுத்துவரும் ஒசாமா பின்லேடனை சர்வதேச தீவிரவாதி என்று சித்தரித்து, இவரின் செயல்பாடுதான் இது; தன்னை தாக்கிய பின்லேடனை ஆப்கானிஸ்தான் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூக்குரலிடுகின்றது.

அமெரிக்காவை எதிர்த்துக் கொண்டால், பெரிய ஆபத்து நேரிடுமோ என்று அஞ்சி நடுங்கும் பின் தங்கிய நாடுகள், அமெரிக்காவின் வசம் சரணடைந்து, 'சர்வதேச தீவிரவாதம்' பற்றி பேச ஆரம்பித்துவிட்டன. பாகிஸ்தான் போன்ற நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒடுக்க, ஒசாமா பின்லேடனை பிடிக்க, அமெரிக்கா வசம் பின்லேடனை ஒப்படைக்க மறுக்கும் ஆப்கானிஸ்தானை தாக்க முழு உதவி செய்ய தயாராகி விட்டன. இதனுடைய முதல் கட்டமாக, அமெரிக்காவிற்கு சார்பாக பாகிஸ்தான் தூதுக்குழு ஆப்கானிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்தி தோல்வியுற்றது.

பாகிஸ்தான் அரசின் இந்த அமெரிக்க சார்பு நிலைபாட்டை பாகிஸ்தான் மக்களோ கடுமையாக கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இதன் முதல் படியாக, அமெரிக்க அதிபர் புஷ்—ன் கொடும்பாவியை எரித்தள்ளனர். அடுத்ததாக, அமெரிக்க தூதரகம் பாகிஸ்தான் மக்களின் கோபக்கனலால் மூடப்பட்டுள்ளது.

## *இந்திய ஆளும் கும்பலின், அமெரிக்க அடிவருடித்தனம்!*

இந்தியாவை ஆளும் இந்து பாசிச பா.ச.க. கும்பலோ, அமெரிக்கா கேட்கும்முன்னே அதன் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு உதவுவதாக அறிவித்தது. தெற்காசியாவில் இஸ்ரேல் போன்று, அமெரிக்காவின் நம்பிக்கைக்குரிய பேட்டை ரவுடியாக மாறத்துடிக்கிறது பா.ச.க. கும்பல். இன்று நாட்டின் இறையாண்மையையே அடகு வைத்துள்ளது. 'சர்வதேசிய இஸ்லாமிய பயங்கரவாதம்' என கூக்கூரலிட்டு முஸ்லீம் சிறுபான்மையினருக்கு எதிரான தனது மதவெறி பாசிச பிரச்சாரத்தை கட்டவிழ்த்துள்ளது. தங்களுடைய எஜமானர் (அமெரிக்கா) தாக்கப்பட்டதை எதிர்த்து மௌன அஞ்சலி இருக்க இந்திய மக்களை நிர்பந்தித்தது. (ஒரிசாவில் பசியின் கொடுமையால் தினமும் செத்துக் கொண்டிருக்கும் எண்ணற்றவரையும் இந்த அதிகார கும்பல் மறந்துவிட்டதே!

பாகிஸ்தானில் வெடிப்பது போல் மக்கள் போராட்டங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதன் அடிவருடிகளுக்கும் பதில் சொல்லும் என்பது திண்ணம்.

**தேன்மொழி.**

Printed by S. Theesmas, Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357
Published and owned by P. Ajitha, 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.
Printed at Lilly Soosai Offset, 12/1, Mohmed Hussain Lane, Royapettai, Chennai - 14. Tel : 8410357
Published from 658(17/34) Rani Anna Nagar, K.K. Nagar, Chennai - 78.
Editor : P. Ajitha



படிப்பகம்

www.padippakam.com

Penn Urimai, 'Registered' TNTAM/2001/4002

# கனன்று கொண்டிருக்கும் கோபக் கனல்

*11–9–2001* அன்று அமெரிக்காவில் உலக வர்த்தக கட்டிடம், அமெரிக்க பென்டகன் இராணுவத் தளம் ஆகியவை விமானங்களால் தாக்கப்பட்டன. விமானத்தில் பயணம் செய்த அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். அமெரிக்காவின் மீதான இந்தத் தாக்குதலைப் பற்றி உலகில் பேசாதவர்களே இல்லை என்று கூறலாம்!



மூன்றாம் உலகப் போர் வெடிக்கப் போகின்றதோ என்று பலர் அஞ்சுகின்றனர். இத்தாக்குதலில் பலர் உயிரிழந்துவிட்டனரே என்று ஒரு பக்கம் வருத்தத்தில் ஆழ்ந்துள்ளனர். மற்றொரு பக்கம், உலக வர்த்தக மையமும், அமெரிக்க இராணுவ தளமும் தாக்கப்பட்டது, அமெரிக்காவிற்கு கிடைத்த பேரடி என்று உலக மக்கள் ஆர்ப்பரிக்கின்றன.

இத்தாக்குதலில் அப்பாவி மக்கள் உயிரிழந்தது என்பது கண்டனத்திற்குரியதே! ஆயினும் உலக வர்த்தக மையம், அமெரிக்க இராணுவத் தளம் தாக்கப்பட்டது என்பது, ஏகாதிபத்தியத்தின் காவல் நாயான அமெரிக்காவிற்கு கிடைத்த மரண அடியே!

## மத்தியக் கிழக்கில் அமெரிக்காவின் ஏகாதிபத்திய வெறியாட்டங்களின் எதிர்விளைவே அமெரிக்காமீதான தாக்குதல்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய், அமெரிக்காவின் சுரண்டலால், ஏவலால், ஒடுக்குமுறையால் பரிதவித்துப் போனவர்கள் (தாக்குதலை செய்தது யாரென்று திட்டவட்டமாக தெரியாத தருணம் இது) குமுறிப் பொங்கும் எரிமலையாய், அமெரிக்க இராணுவ தளத்தை, உலக வர்த்தக மையத்தை தகர்த்தெறிந்துள்ளனர். உலகமயமாக்கல் என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியதிகாரத்தை தன் கட்டுக்குள் கொண்டுவர துடிக்கும் அமெரிக்கா, இத்தாக்குதலால் இன்று ஆடிப்போயுள்ளது.

இன்று உலகின் மிகப் பெரிய ஏகாதிபத்தியமாகவும், இராணுவ வல்லரசாகவும், உலகப் போலிசுக்காரனாகவும், பிற்போக்கு ஒடுக்குமுறையாளனாகவும் அமெரிக்கா விளங்கியது என்பது ஊறறிந்த உண்மையே ! இராணுவ முக்கியத்துவம் கருதியும், அப்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கத் துடிக்கிறது. இதன் விளைவாக, அப்பகுதியின் அராபிய மக்களுக்கு இழைத்தக் கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

பாலஸ்தீனர்களை நாட்டை விட்டு விரட்டி அகதிகளாக்கி, பல்லாயிரம் பேரை படுகொலை செய்து, அண்டை நாடுகளை ஆக்கிரமித்து, இன்றுவரை அப்பாவி பாலஸ்தீன மக்களை இராணுவத் தாக்குதலில் படுகொலை செய்து வரும் யூத இனவெறி இஸ்ரேல் அரசை பாதுகாத்து வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். இதை எதிர்த்து பெரும்பான்மை நாடுகள் கண்டிப்பதை, தன்னுடைய

(தொடர்ச்சி 42–ம் பக்கம்)

படிப்பகம்